பாலவித்யா

தொகுதி 1 பகுதி 1

ஜனவரி 1930

JL


77211, N30 By

N30·1·1

188767

777

# பாலவித்யா.



# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபால்கூலி உள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா. 2-0-0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று.

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்புகள்.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்பி வைக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் மாதக் கடைசி வாரத்தில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் நமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இரு பாலர்க்கும் சௌகர்யம். வி. பி யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. ஆகையால் சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பியாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தாநம்பரை எழுத வேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரிய வியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர வகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப் பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 11.

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,
நெ. 5, கீழ அம்மன் தெரு ஸ்ரீ வித்யா பிரஸ், கும்பகோணம்.

உ

# பால வித்யா

(மாதப் பத்திரிகை.)

OFFICE OF THE REGISTRAR
4 FEB 1930
MADRAS

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்."

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."



| | | |
|---|---|---|
| தொகுதி<br>I | 1930௵ ஜனவரி௴<br>சுக்ல௵ தை௴ | பகுதி<br>I |



## விநாயக வணக்கம்.

உலகெலாம் உவப்ப ஓங்கிருள் கடியும்
கதிரவன் என்னக் கடல்சூழ் புவியினர்
மனவிருள் கடிந்து மாட்சிமை எய்தும்
பண்பினை நந்தம் பால வித்யாவும்
பெற்று நனி விளங்கக் கற்றையஞ்சடைக்
கண்ணுதல் அருளிய கரிமுகத்தோனும்
பிரணவ முகத்துப் பெரும் பெயர்க் கடவுளின்
இணையடி மலர்களை இறைஞ்சுதும் இனிதே.

OFFICE OF THE REGISTRAR
4 FEB 1930
MADRAS

## கடவுள் வணக்கம்.

“ அங்கிங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தி ஆகி
அருளொடு நிறைந்த தெது ? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்த தெது ? மனவாக் கினில்
தட்டாமல் நின்ற தெது? சமயகோடிகள் எலாம்
தம் தெய்வம் எம் தெய்வம் என்(று)
எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது ?
எங்கணும் பெருவழக் காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ள தெது? மேல்
கங்குல் பகல் அற நின்ற எல்லையுள தெது? அது
கருத்திற்கு இசைந்தது ; அதுவே
கண்டன எலாம். மோன உருவெளிய தாகவுங்
கருதி அஞ்சலி செய்குவாம்.”

(ஸ்ரீ தாயுமான சுவாமிகள்.)

“ ஏழ் பெருங்கடல் மாநிலம் எங்கும் நல்லறமே
சூழ்க, வண்தமிழ் ஓங்குக, தேங்குக சுருதி,
வீழ்க பைம்புயல், விளங்குக வளங்கெழு மனுநூல்,
வாழ்க அன்புடை அடியவர் மன்னு மாதவமே.”

(ஸ்ரீ வில்லிபுத்தூரார்.)

# சபேசன்.

P. கும்பேசுவரன்
எழுதியது.

பிரசுராலயம்:
“ பால வித்யா ” ஆபீஸ்
ஸ்ரீ வித்யா பிரஸ்,
கும்பகோணம்.

காபிரைட்]

17881

ஒருவருமில்லை! ஏன்! இன்று சாயங்காலம் நான் அவருடன் பேசிக்கொண்டிருந்த அரைமணி சாவகாசத்திற்குள் ஒரு நாட்டுக்கோட்டைச்செட்டியார் வந்து ரூபாய் 300 இளக்கி விட்டுப் போயிருக்கிறார்!"

"ஆமாமிருக்கட்டும்! அவருக்கு இப்பொழுது வயதென்ன? மூத்தாள் குழந்தைகள் ஏதேனுமுண்டோ?"

இக்கேள்விகளைக் கேட்கும்பொழுது தையு அம்மாளுடைய முகத்தில், கவலையின் குறிகள் கொஞ்சம் காணப்பட்டனவென்றே சொல்லவேண்டும்!

"வயது அதிகமாயிருந்தால் 40 இருக்கும். மூத்தாள் குழந்தைகள் ஒன்றுமில்லை." என்று தீக்ஷிதர் பதில் சொன்னார்.

தையு அம்மாளுடைய முகம் மலர்ந்தது.

"வயது 40 தானா? அஃதொன்றும் பாதகமில்லை! இன்னும் மூத்தாள் குழந்தைகள் ஒன்றுமில்லையென்று சொல்லுகிறீர்கள். இப்பேர்ப்பட்ட வரன் அகப்படவே அகப்படாது! ஏதோ, ஆதிக்கடவுள்தான் நம் மேல் கிருபைவைத்து இதை முடித்துவைக்கவேண்டும்." என்று சொல்லிக்கொண்டே தன் கண்களை இறுக மூடிக்கொண்டு, இரு கரங்களையும் கூப்பினாள். பிறகு, தன் கன்னங்களில் படபடவென்று அறைந்துகொண்டாள்.

பிறகு ஒரு நிமிஷநேரம் வரையில் இருவரும் மௌனமாயிருந்தார்கள். அதன் முடிவில், அவ்வீட்டு வாசற்கதவை யாரோ திறக்கும் சப்தம் கேட்க, தீக்ஷிதர், "அடியே! யாரது? போய்ப்பார்!" என்றார். ஆனால், தையு அம்மாள் முக்கி முனகிக்கொண்டு, தன்னிடத்தை விட்டு எழுந்திருக்குமுன், சுமார் 20 வயதுள்ள ஓர் அழகிய வாலிபன் அவர்கள் உட்கார்ந்துகொண்டிருந்த அறைக்குள் நுழைந்தான்! அவன் அவர்களுடைய புதல்வனாகிய சபேசனைத்தவிர வேறு யாரும் அன்று. அவனைக் கண்டதும் தையு அம்மாள்,



"ஏண்டா! சபேசா! மணி 8க்கு மேலாகிறதே! சிறுசுகள் காலாகாலத்தில் சாப்பிட்டுவிட்டு வாசிக்க உட்காருவதல்லவோ அழகு?" என்று கண்டிக்க, அவ்வாலிபன் புன்சிரிப்புடன்,

"இல்லையம்மா! இன்று நகர மண்டபத்தில் ஒரு பிரஸங்கம் நடந்தது. அதற்குப் போயிருந்தேன்!" என்று விடையளித்தான்.

"இந்த ஏழவு ஊரில் பிரஸங்கத்துக்கு என்ன குறைச்சல்? ஆமாம்! எதைப்பற்றிப் பேசினார்கள்?" என்று தையு அம்மாள் வினவினாள்.

சபேசன் மரியாதையுடன்,

"நம் ஜாதியில் பெண்களுக்கு மிகவும் சிறுவயதில் விவாஹம் செய்துவைக்கும் வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்றும், கைம்பெண்களுக்கு மறு விவாஹம் செய்துவைக்கவேண்டியது மிகவும் அவசியமென்றும்,—" என்று மேலே பேசுமுன்,

"சிவா! சிவா! கைம்பெண்களுக்கு மறுவிவாஹமா?" என்று தையு அம்மாள் கடுமையான பார்வையுடன், தன் பர்த்தாவை நோக்கி, "ஆமாம்! நீங்கள் இவனுக்கு ரொம்பவும் இடங்கொடுக்கிறீர்கள். இவன் இப்பேர்ப்பட்ட ஆபாஸப் பிரஸங்கங்களுக்குப் போகாமல் கண்டிக்கவேண்டும்." என்றாள்.

தீக்ஷிதர் உடனே, தம் புத்திரனைப் பார்த்து,

"டேய்! மொட்டச்சிகளுக்கு மறு விவாஹமா? என்னடா வெட்கக்கேடு?" என்று அதட்டவே, சபேசன் மரியாதையுடன்,

"அப்பா! தயவுசெய்து மன்னிக்கவேண்டும்! நம் ஜாதியில் தற்சமயம் பெண்களின் நிலைமை மிகவும் பரிதாபப்படத்தக்கதாயிருக்கிறது——" என்று பேசிக்கொண்டிருக்கையில் தையு அம்மாள்,

"ஏண்டா! பெண்களைப்பற்றி, என்னைக்காட்டிலும் உனக்குத் தெரிந்துவிட்டதோ? அசடே! போய்ச் சந்தி பண்ணிவிட்டுச் சாப்பிடவா!" என்று கோபத்துடன் உத்தரவிட்டாள்.

தன் பெண்ஜாதியின் குணத்தை நன்கறிந்த தீக்ஷிதர், அவளைச் சமாதானப்படுத்தினார். "என்னடீது! அவன் தான் சிறுபிள்ளைத்தனமாய்ப் பேசுகிறானென்றால் நீயும் பிரமாதமாய் அவனுடன் வாக்குவாதம் பண்ண ஆரம்பிக்கிறாயே! சரி! சரி! போய் இலையைப்போடு. அடாடா! மறந்தே விட்டேனே! அவர் காலமே, குழந்தையைப் பார்க்க வரப்போகிறார்!"

"என்ன? காலமே வரப்போகிறாரா? என்ன! இதை இவ்வளவு சாவகாசமாய்ச் சொல்லுகிறீர்களே? சரி! நீங்களிருவரும் குழந்தையைச் சாதம் போடச்சொல்லிச் சாப்பிடுங்கள். நான் போய் எதிர்வீட்டு மதுராம்பாளிடமிருந்து கொஞ்சம் காப்பிப்பொடி வாங்கிக்கொண்டு வருகிறேன். அவ்வளவு பெரிய மனுஷன் வந்தால் காப்பியாவது போட்டுக் கொடுக்கவேண்டாமோ? அடியம்மா! ராஜம்!" என்று தைபு அம்மாள் தன் பெண்ணையழைக்க சுமார் 12 வயதுள்ள ஒரு பெண், மிகவும் உத்ஸாகத்துடன் ஓடிவந்து,

"அம்மா! இலை போட்டுவிட்டேனே! அண்ணா வந்துவிட்டானா?" என்று கேட்க,

"வந்துவிட்டான். நீ அவர்களுக்குச் சாதம் போடு. நான் இதோ வந்துவிட்டேன்." என்று சொல்லிக்கொண்டே தைபு அம்மாள் பரபரப்புடன் வெளியே போய்விட்டாள்.

நிற்க, தன் தாயின் பரபரப்பைக் கண்ட சபேசன் அதற்குக் காரணம் என்னவென்பதைச் சற்றுமறியாதவனாகையால், தன் தந்தையைப் பார்த்து,



"அப்பா! யாரோ நாளைக் காலையில் வரப்போகிறாரென்றீர்களே! அது யார்?" என்று கேட்க, தீக்ஷிதர்,

"வா! வா! சாப்பிட்டுக்கொண்டே அதைப்பற்றிப் பேசுவோம், என்று சொல்லிக்கொண்டே சமையலறையை நோக்கி நடந்தார்.

இருவரும் இலைகளின் முன்பு உட்கார்ந்ததும் ராஜம் பரிமாற ஆரம்பித்தாள். அவளுக்கு வயது 12 என்று முன்னமேயே சொல்லிவிட்டோம். இன்னும் அவளுடைய அழகையும், சந்திரபிம்பம்போன்ற அவளுடைய முகத்தில் காணப்பட்ட புத்திசாலித்தனத்தையும் கண்டவர்கள், நமக்கும் இப்பேர்ப்பட்ட ஒரு பெண் இருக்கமாட்டாளாவென்று கண்டிப்பாய் ஏங்குவார்கள் என்பதுடன் அவளைப் பற்றி வர்ணிப்பதை நிறுத்திக்கொள்வோம்! மிகவும் பயபக்தியுடன் பரிமாறிவிட்டுத் தன் தகப்பனும், தமையனும் சாப்பிட ஆரம்பித்ததும் வணக்கத்துடன் ஒரு மூலையில் நின்றுகொண்டு, சபேசனை உற்று நோக்கியவண்ணமிருந்தாள். அவ்வாலிபன், 'அவர் காலமே குழந்தையைப் பார்க்க வரப்போகிறார்' என்று தன் தகப்பன் சொன்னதிலிருந்து, ஏதோ மனதில் சந்தேகமுண்டாகி, அதே யோசனையுடன் இலையில் போடப்பட்ட அன்னத்தைக் கையால் கிளறிக்கொண்டிருந்தானேயொழியச் சாப்பிடவில்லை. கடைசியில், தன் தகப்பனைப் பார்த்து,

"அப்பா! தயவுசெய்து என் அவசரத்தை மன்னிக்கவேண்டும். யாரோ காலமே வரப்போகிறார் என்றீர்களே! அவர் யாரென்பதையும் எதற்காக வருகிறாரென்பதையுமறிய ஆவலுடனிருக்கிறேன்." என்றான்.

தீக்ஷிதர்:—"அப்படியா? ஆமாம்! உன் தங்கைக்கு ஒரு வரன் பார்த்திருக்கிறேன்."

சபேசன்:—"என்ன? என்ன? ராஜத்துக்கு வரனா? ஏனப்பா! அதற்கு இப்பொழுது என்ன அவசரம்? அவளுக்கின்னும் வயது 12 கூட நிரம்பவில்லையே?"

தீக்ஷிதர் :—(ஆச்சரியத்துடன்) "ஏண்டா! 12 வயது குறைச்சல் என்பது உன் அபிப்பிராயமோ? அசடே! பெரியவர்கள் செய்யும் காரியத்தில் தலையிடாதே."

சபேசன் :—"அப்பா! மன்னிக்கவேண்டும். நம் ஜாதியில் இப்படிப் பெண்களுக்குச் சிறுவயதிலேயே விவாஹம் செய்துவைப்பது மிகவும் பிசகு."

தீக்ஷிதர் :—"அடே! இதைப்பற்றி நீ எனக்குப் போதிக்கவேண்டியது அவசியமில்லை. உன் காரியத்தைப் பார்."

சபேசன் :—"ஆனால், இதில் சம்பந்தப்பட எனக்குப் பாத்தியமில்லையோ?"

தீக்ஷிதர் :—"கிடையவே கிடையாது! டேய்! இப்பொழுதே சொல்லிவிட்டேன். அஸந்தர்ப்பமாக ஏதாவது கண்டபடி பேசாதே." என்று கண்டிப்பாய்க் கோபத்துடன் சொல்ல,

சபேசன் கொஞ்சநேரம் மௌனமாயிருந்தான். பிறகு தன் தலையைத் திருப்பி, எதிரில் நின்றுகொண்டிருந்த தன் தங்கையை ஒருதரம் உற்று நோக்கினான். அப் பெண்மணியும், தன் தமயனுடைய கலவரத்தைக் கண்டு, பயந்தவள்போல அவனைக் கவனித்தவண்ணமே இருந்தாள். இவ்விதம் இருவரும் பரிதாபப்படத்தக்கவிதம், ஒருவரை ஒருவர் நோக்கியவண்ணம் சுமார் 5 நிமிஷநேரமிருந்தார்கள். அந்தோ! அச்சமயம், சபேசனுடைய மனதிலிருந்த குழப்பத்தையும், இன்னும் புத்திக்குறைவால் தன் பெற்றோர்கள், உலகத்தையேயறியாத தன் அருமைத் தங்கையை அவ்விதம் அதற்குள், ஒருவனுக்குத் தத்தம் செய்துவிடத் தீர்மானித்ததாலுண்டாகிய கோபத்தையும் வர்ணிக்கமுடியாது. அவன், ராஜத்தின் முகத்தைப் பார்க்கப்பார்க்க, அவனுடைய மனதிலுண்டாகிய கவலையும் வருத்தமும் அதிகரித்தன. "ஐயோ! இதென்ன அநியாயம்? இக்குழந்தைக்கு இதற்குள் விவாஹம் செய்து



வைக்க இவர்கள் துணிந்துவிட்டார்களே! இதில் நான் எதையும் செய்யச் சக்தியற்றவனாயிருக்கிறேனே!" என்று அவன் நினைத்தபொழுது அவன் கண்களில் நீர் தளும்பியது.

நிற்க, ராம தீக்ஷிதர், தம் இலையைக் காலிசெய்துவிட்டார். மேலே அன்னம் வராததால் தம் தலையைத் தூக்கித் தம் பெண்ணைப் பார்க்க, அவள் பயந்த பார்வையுடன் தன் தமயனை உற்று நோக்கியவண்ணம் நிற்பதையும், இன்னும் சபேசன், கண்ணீர்வடிய உட்கார்ந்திருப்பதையும் கண்டார். உடனே அவருடைய முகத்தில் கோபம் ஜ்வலித்தது! தம் பற்களை நற நறவென்று கடித்துக்கொண்டே,

"கஷ்டம்! கஷ்டம்! இதென்ன அபசகுனம்! ஏண்டா! என்னடா இது?" என்று கர்ஜித்தார். சபேசன் தடுமாற்றத்துடனும், ஆனால் மரியாதையுடனும்,

"அப்பா! ஒன்றுமில்லை. இதில் நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நீங்கள் பார்த்திருக்கும் வரன் யாரென்பதைச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான்.

தீக்ஷிதர் :—"அப்படிக் கேள், சொல்லுகிறேன். இன்னும் நான் குழந்தைக்குத் தேடிவந்திருக்கும் பேர்வழி யாரென்பதை நீ அறிந்தால் இப்படிப் பேசமாட்டாய்! மடத்தெரு வக்கில் ஸுந்தரம் அய்யரை உனக்குத் தெரியுமென்றே நினைக்கிறேன்! என்றார்.

'ஸுந்தரம் அய்யர்' என்ற நாமதேயத்தைக் கேட்டதும், சபேசன் தன் தலைமேல் இடி விழுந்தவன்போல் காணப்பட்டான். அவன்,

"என்ன? ஸுந்தரம் அய்யரா? அப்பா! கோபால செட்டி மளிகைக்கடைக்கடுத்த வீட்டிலிருக்கும் அந்தக் கிழவரையா சொல்லுகிறீர்கள்?" என்று பரபரப்புடனும், ஆத்திரத்துடனும் கேட்க,

தீக்ஷிதர் :—"அவரே! ஆனால் நீ அவரைக் கிழவர் என்று சொல்வதில் எனக்கிஷ்டமில்லை!" என்றார்.

சபேசன் :—"உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டாலும், அவர் கிழவர் என்பதை எவராலும் மறுக்கமுடியாது! அப்பா! வேண்டாம்! வேண்டாம்! கிளியை வளர்த்துப் பூனையின்வாயில் கொடுப்பதுபோல், என் அருமைத்தங்கையை இவ்விதம் படுகுழியில் தள்ளாதீர்கள்." அவர், கிழவர் என்பதையுந்தவிர, அவருக்கு ஹிருதய ஸம்பந்தமான ஒரு கொடிய வியாதியுண்டென்பது எனக்குத் தெரியும். நேற்று நான் டாக்டர் ஸப்தரிஷி ஐயர் விட்டிற்கு உங்களுக்கு மருந்து வாங்குவதற்காகப் போயிருந்தபொழுது இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டேன்."

தீக்ஷிதர் :—"டேய்! வீணாய் இங்கு இந்த மூட்டையெல்லாம் அளக்காதே! இங்கே பார்! எல்லாம் ஏற்பாடாய்விட்டன. முகூர்த்தங்கூடப் பார்த்துவிட்டேன். நீ வம்பு செய்வதில் பிரயோஜனமில்லை."

சபேசன்:—"அப்பா! உங்களை மறுபடியும் கெஞ்சுகிறேன். இந்த வரன் வேண்டாம். நீங்கள் இப்படிச் செய்வதற்குக் காரணம், உங்களுக்கு அப்பழிகாரனுடைய பணத்தின்மேலுள்ள மயக்கமும், இன்னும் உலகத்தில் இப்பேர்ப்பட்ட வெட்கமற்ற கிழங்களுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்களின் பரிதாபநிலைமையைச் சற்றுமறியாத்தனமும் என்பது எனக்குத் தெரியும். அப்பா! இவ்விதம் நம் ராஜத்தை அவனுக்குக் கொடுப்பதைக்காட்டிலும் அவளுடைய கழுத்தை முறித்து, பொங்கி வழியும் காவேரியம்மனுக்குத் தத்தம் செய்துவிடுவது மேல்!"

தீக்ஷிதர் :—"சிச்சீ! நாயே! வாயை மூடு. உன் யோசனையையும் அபிப்பிராயத்தையும் நான் கேட்கும்பொழுது நீ வெளியிடலாம்!"



சபேசன் :—"அப்பா! வீணில் என் கோபத்தைக் கிளப்புகிறீ—"

தீக்ஷிதர் :—"அடகெடுத்தாயே! பேஷ்! பேஷ்! எனக்கு இது அவசியம் வேண்டும். டேய்! மறுபடியும் சொல்கிறேன். வாயை மூடிக்கொண்டு உஷாராயிரு."

அச்சமயம், வெளியில்போயிருந்த தையு அம்மாள், காப்பிப்பொடியுடன் உள்ளேவர, அங்கு, தன் புருஷனும், புதல்வனும் சச்சரவிட்டுக்கொண்டிருப்பதைக் காணவே, பரபரப்புடன்,

"என்ன இது? என்ன சமாச்சாரம்? என்று வினவினாள்."

"ஏண்டி! உன் பிள்ளையின் புத்திசாலித்தனத்தைப் பார்த்தாயா? ராஜத்துக்கு இப்பொழுது கல்யாணம்பண்ண அவசரமில்லையாம்—" என்று தீக்ஷிதர் மேலே பேசுமுன், தையு அம்மாள்,

"உங்களுக்கு இது நன்றாய் வேண்டும்! அப்பொழுதே, நான் இந்த இங்கிலீஷ்ப் படிப்பு வேண்டாம், நீசனாய்ப் போய்விடுவான், சிவனே யென்று அத்தியயனத்தில் போட்டுவிடுங்கள் என்று முட்டிக்கொண்டேனே! கேட்டியளா?" என்று புலம்பினாள்.

பிறகு, கொஞ்சநேரம், எல்லோரும் ஒருவரையொருவர் உற்று நோக்கியவண்ணமிருந்தார்கள். அதன் முடிவில் சபேசன்,

"அப்பா! மறுபடியும் உங்களைக் கெஞ்சுகிறேன். இந்த வரனை விட்டுவிடுங்கள்." என்று மன்றாடினான். ஆனால் தீக்ஷிதர்,

"டேய்! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று நினைக்கிறேன். சொல்வதைக்கேள்! இந்தக்காரியத்தில் நீ தலையிடாதே! வீணாய் மரியாதை கெட்டுப் போவாய்!"

என்று கோபாவேசத்துடன் சொல்லிக்கொண்டே மறுபடியும் தம் பற்களைக் கடித்தார்.

“ஆனால் இதைச் செய்துவிடுவதாகவே நிச்சயித்துவிட்டீர்?” இதைக் கேட்கும்பொழுது சபேசனுடைய முகம் கோபத்தினால் சிவந்தது.

“கண்டிப்பாய் இதை நடத்தியே தீர்வேன்!” என்று தீக்ஷிதர் உறுதியுடன் கூறவே, சபேசன் ஆத்திரத்துடன்,

“அப்படியானால் உம்மைப்போன்ற பாபி ஒருவருமில்லை. அப்பா! இதை நான் தடுக்கமுடியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதே! ஆஹா! என்ன அநியாயம்!—” என்று அவன் மேலே பேசுமுன், தீக்ஷிதர், அவருடைய கோபம் அவளையும் மீறிப்போக, அப்படியே தம் எச்சிற் கையால் பளீர் என்று சபேசனுடைய கன்னத்தில் அறைந்துவிட்டார்!

எல்லாவற்றையுங் கண்டு, நடுநடுங்கி நின்றுகொண்டிருந்த ராஜம், இவ்விதம் தன் தமையன் அவமானப்படுத்தப்பட்டதைக் கண்டதும், பயத்தினால், “ஐயோ!” என்று வீறிட்டலறினாள். தையு அம்மாள் காப்பிப் பொடியை அப்படியே எறிந்துவிட்டு, ஓடி, தன் நாதருடைய கரங்களைப் பற்றிக்கொண்டாள்.

நிற்க, சபேசன், அப்படியே தன்னிடத்தை விட்டு எழுந்து, கொல்லைப்பக்கம் சென்று, தன் உடம்பைச் சுத்தம் செய்துகொண்டு திரும்பிவந்து,

“அப்பா! நான் இவ்விதம் பேசியதற்குக் காரணம், எனக்கு, என் அருமைத் தங்கையின் மேலுள்ள அன்பே என்பதைச் சற்றுமறியால், என்னை இப்படி அவமானப்படுத்திவிட்டீர்கள். ஆனால் அதற்காக நான் சற்றும் வருந்தப்படவில்லை. என்னைக் கண்டிக்க, உங்களுக்கு எவ்வித பாத்தியமுமுண்டு. ஆனால் நான் ஏதோ இன்னும் பச்சைக் குழந்தையென நினைத்து, என் அபிப்ராயத்தைச் சிறிதும் லக்ஷியம் செய்யாமல், நீங்கள் இக்குழந்தையை, இப்



படுகுழியில் தள்ளத் தீர்மானித்துவிட்டதைக் காண என் மனம் பதறுகிறது. இக்கார்யத்தில், எனக்கு எள்ளளவும் இஷ்டமில்லையாகையாலும், இன்னும் நானிங்கு இருக்கும் பக்ஷத்தில் இம்மனஸ்தாபம் மேலும் அதிகரிக்குமாகையாலும், இந்நிமிஷமே இவ் வீட்டைவிட்டு வெளியே போய்விட நிச்சயித்துவிட்டேன். ஹே! தெய்வமே! நீயாவது உன் கண்களைத் திறந்து என் தங்கையைக் காப்பாற்றுவாய்!” என்று சொல்லிவிட்டு மடமடவென்று வெளியே நடந்தான். அதைக்கண்ட ராஜம், அவனைப் பின்பற்றி ஓடி அவனைக் கட்டிக்கொண்டு,

“அண்ணா! வேண்டாம்! போகாதே! என்று கதற ஆரம்பிக்கவே, சபேசன் அன்புடன் அவளை முத்தமிட்டுக்கொண்டு,

“அம்மா! பிரமன் உன் தலையில் எழுதிய எழுத்தை என்னால் அழிக்கமுடியாது. ஆனாலும் இப் பாபிகள், உன்னை அக் கிழவனுக்குத் தத்தம் செய்வதை என் கண்ணால் கண்டு சகியேன்!” என்று கூறிக்கொண்டு, துரிதமாய் வெளியே போய்விட்டான்.

* * * * *

மறுநாட் காலை எட்டுமணி இருக்கும்.

வக்கில் ஸுந்தரம் அய்யர், தம் வீட்டில் ஒரு பெரிய நிலைக்கண்ணாடியின் எதிரில் நின்றுகொண்டு, தம் அழகைக் கண்டு ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தார். விலையுயர்ந்த ஜரிகை வேஷ்டிகளாலும், பட்டுச்சட்டைகளாலும், எவ்வளவோ சிரமப்பட்டு அவர் தம்மைச் சிங்காரித்துக்கொண்டிருந்தபோதிலும், அவரைக்கண்ட எவரும் அவருக்கு வயது கண்டிப்பாய் ஐம்பதுக்குமேலிருக்குமென்பதை எளிதில் கண்டுகொள்வார்கள். இன்னும், அவர் பெரிய காமலோலர் என்பதையும், அவர் பால்யத்தில் செய்த அக்கிரமங்களின் பலனால் அவரை இன்னும் உபாதித்துக்கொண்டிருந்த தூர்வியாதிகளின் சின்னங்களையும், அவருடைய முகமே எடுத்துச் சொல்லியது! நடுவில், ஒருதரம்,

அவர் தம் வாயைத்திறந்து, தம் பற்களின் அழகைப்பார்த்துக்கொள்ள, அவைகளில் குறைந்தது 25 பற்களாவது பொய்ப்பற்களென்பது வெளியாயிற்று! அவருக்கு அவருடைய பெற்றோர்கள் 'ஸௌந்தரம்' என்று நாமதேயம் சூட்டியது மிகவும் அநியாயமென்பதைச் சுட்டி போன்ற அவருடைய தொந்தி வாதிப்பதுபோலிருந்தது. கடைசியில், கண்ணாடியை விட்டு நடந்து, ஒரு அழகிய ஸோபாவின்மேல் அமர்ந்துகொண்டார். பலதரம், ஆத்திரத்துடன், கடிகாரத்தைப் பார்த்தார். அதற்குக் காரணம் அன்று திங்கட்கிழமை யாகையால், ராகுகாலம் கழிந்ததும் பெண்ணைப்பார்க்கப் போகவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தார். கொஞ்சநேரமானதும், ஆத்திரம் தாங்காமல், தம்மிடத்தை விட்டெழுந்து, மேலும் கீழும் உலவ ஆரம்பித்தார். ஒருவழியாய் மணியும் 8¾ ஆயிற்று. பத்மநாபன் என்ற தம் பரிசாரகனை அழைத்து, தம் மோட்டாரைக் கொண்டுவரும்படி உத்தரவிட்டார். பிறகு, தம் இடுப்பிலிருந்து ஒரு வெள்ளிப் பொடி டப்பியை எடுத்து, அதில் ஒரு சிமிட்டாவைக் கன அட்டஹாஸத்துடன் தம் நாசித்துவாரங்களில் செலுத்திக்கொள்ள, பொடி மிகவும் காரமாயிருந்ததால் இரண்டு மூன்று தரம் தும்மினர். அப்படித் தும்மும்பொழுது, அவருடைய மூக்கிலிருந்து வெளிக்கிளம்பிய கரேலென்ற சளி அவரணிந்துகொண்டிருந்த பட்டுச்சட்டையில் விழ, அதைத் துடைக்கும் முயற்சியில், அதன் முன்பக்கம் முழுமையும் ஆபாசம் செய்துவிட்டார். உடனே, கோபத்துடன் அதைக் களைந்து எறிந்துவிட்டுப் பீரோவைத் திறந்து, வேறு சட்டையொன்றை எடுத்துப் போட்டுக்கொண்டார். ஆனால் அவசரத்தில், முதல் பொத்தானை, இரண்டாவது துவாரத்தில் மாட்டிக்கொண்டார். அதே சமயம் மணி 9 அடிக்க, பரபரப்புடன் வெளியே நடக்குந்தறுவாயிலிருந்தார். ஆனால் அச்சமயம் அவருடைய சமையற்காரன், அங்குத்தோன்றி, அவரை உடனே பார்க்கும்பொருட்டு வெளியில் ஒருவன் காத்துக்கொண்டிருப்பதாய்ச் சொல்ல,



"மட நாயே! இப்பொழுது யாரையும் என்னால் பார்க்கமுடியாது. பிறகு வரச்சொல்!" என்று சீறி விழுந்தார். ஆனால் பத்மநாபன் அவ்வறையைவிட்டுப் போகுமுன், அவரைப் பார்க்கவந்தவன் உள்ளே நுழைந்துவிட்டான். அது நம் சபேசனைத்தவிர வேறல்ல. அவனைக்கண்டதும் ஸௌந்தரம் அய்யருடைய முகம் மலர்ந்தது!

"வா, அப்பா! வா! யாரோ என்று நினைத்துவிட்டேன். எங்கே, நான் வராமலிருந்துவிடுவேனோ வென்று சந்தேகித்து அழைத்துக்கொண்டுபோக வந்தாயோ? அடடா! என்ன சமாச்சாரம்? உன் முகத்தைப் பார்த்தால் பயமாயிருக்கிறதே?" என்றார்.

வாஸ்தவமே! அச்சமயம், சபேசனுடைய முகத்தில் ஒருவித கலவரப்பார்வையும், பரிதாபப்படத்தக்க தோற்றமும் காணப்பட்டன. ஸௌந்தரம் அய்யருக்குச் சபேசனுடைய வீட்டில் நடந்த விஷயம் ஒன்றும் தெரியாதாகையால், அடிவயிற்றைக் குழப்பியது. ஆகவே, கவலையுடனும், அவசரத்துடனும்,

"என்ன அப்பா! என்ன சமாச்சாரம்?" என்று மறுபடியும் வினவினார்.

சபேசன், சாந்தமாய், மரியாதையுடன்,

"ஐயா! விஷயம் இதுவே! தங்களை என் தங்கையைக் காப்பாற்றும்படி கெஞ்சுகிறேன்!" என்றான்.

ஸௌந்தரம் அய்யர், ஒன்றும் தெரியாமல், கொஞ்சநேரம் பிரமித்து நின்றார். பிறகு,

"அப்பா நீ பேசுவதின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லையே!" என்றார்.

சபேசன்:—"ஸ்வாமீ! நீர் என் தங்கையை விவாஹம் செய்துகொள்ளும் எண்ணத்தை அடியுடன் விட்டுவிடவேண்டும்!"

வக்கிலுக்குத் தம் தலைமேல் இடி விழுந்தது போலிருந்தது. கிளி போன்ற பெண் தமக்குக் காவு கிடைக்கப் போகிறதென்று அவர் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்ததால் சபேசனுடைய வார்த்தைகளைக் கேட்டதும், தம் செவிகளையே நம்ப இஷ்டப்படாதவர் போல், ஒரு நிமிஷநேரம், அவ்வாலிபனை உற்று நோக்கியவண்ணமிருந்தார். இன்னும் அக்கல்யாணத்தில் இஷ்டப்படாதவன் சபேசன் ஒருவனே என்பதையும், ராம தீக்ஷிதர், எப்படியாகிலும் அதை முடித்துவிடுவதென்று தீர்மானித்திருப்பதையும், அவர் அறியாதவாராகையால், மிகவும் மனங் குழம்பினார். கடைசியில், ஒருவழியாய்த் தம் பதட்டத்தை அடக்கிக்கொண்டு,

"அப்பா! நடந்த விஷயமென்ன? சற்று விவரமாய்ச்சொல்." என்றார்.

சபேசன் :—"ஐயா! தாங்கள் மிகவும் படித்தவர், நியாயமான வார்த்தைக்குக் கட்டுப்படுவீரென்ற நம்பிக்கையுடன் இங்கு வந்திருக்கிறேன்."

வக்கில் :-"வாஸ்தவம்! நியாயத்திற்குக் கட்டுப்பட நான் தயார்! ஆனால் விஷயத்தை நீ இன்னும் சொல்லவில்லையே?"

சபேசன் :—"விஷயம் இவ்வளவே! என் தந்தை உமக்கு என் தங்கையைக் கொடுத்துவிடுவதென்றே நிச்சயித்துவிட்டார். ஆனால்—"

இதைக் கேட்டதும் ஸௌந்தரம் அய்யருக்குண்டான சந்தோஷம் சொல்லத்தக்கதல்ல! ஒரு தரம் "அப்பாடா!" என்று பெருமூச்செறிந்தார். பிறகு,

"ஆனால் இதில் யாருக்கு ஆக்ஷேபனை?" என்று கேட்டார்.

சபேசன் :—"ஸ்வாமி! விஷயத்தை ஒளிப்பதில் பிரயோஜனமில்லை. இக் கல்யாணத்தில் எனக்குச் சற்றும் இஷ்டமில்லை!"



ஸௌந்தரம் அய்யர் உடனே எல்லாவற்றையும் அறிந்துகொண்டார். இனி, பெண்ணைப்பற்றிய கவலை இல்லையென்றும், சபேசனால் அக் கல்யாணத்தைத் தடுக்கமுடியாதென்றும் தெரிந்துகொண்டு, மிகவும் கம்பீரத்துடனும் அலக்ஷியத்துடனும் பேச ஆரம்பித்தார்.

ஸௌந்தரமய்யர் :—"ஏண்டா! இதில் உனக்கென்ன ஆக்ஷேபனை?"

சபேசன் :—"ஐயா! நீர் இக்கேள்வியைக் கேட்பதைக் காண எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது!"

ஸௌந்தரமய்யர் :—"டேய்! உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்றே நினைக்கிறேன். சரி! நாழியாய் விட்டது! எனக்கு வெளியே போகவேண்டும்!"

சபேசனுடைய முகம் சிவந்தது!

சபேசன் :—"ஆனால் ஒரு பெண்ணை அநியாயமாய்க் கெடுத்துவிடுவதென்றே தீர்மானித்துவிட்டீரோ?"

ஸௌந்தரமய்யர் : "அசடே! அசடே! சிறுபிள்ளைத்தனமாய்ப் பேசாதே!"

சபேசன் :—"ஐயா! என் பதட்டத்தைத் தயவுசெய்து மன்னிக்கவேண்டும். உம்மைப்பற்றிய விஷயம் உமக்கே நன்றாய்த் தெரியும். வேண்டாம்! வேண்டாம்! தயவுசெய்து என் அருமைத் தங்கையைக் காப்பாற்றும்!" என்று கெஞ்சிக்கொண்டே, வக்கிலுடைய இரு கரங்களையும் பற்றிக்கொண்டு ஆவலுடனும், பரிதாபப்படத்தக்க பார்வையுடனும் அவரை உற்று நோக்கியவண்ணம் நின்றான்.

ஸௌந்தரமய்யர் :—"டேய்! என் கையை விடு!"

வக்கில், தன்னை ஏதோ பைத்தியமென்று நினைத்துப் பரிஹஸிக்கிறாரென்பதைக் கண்ட சபேசனுடைய முகத்தில் மறுபடியும் கோபம் ஜ்வலித்தது!

சபேசன் :—" ஓய்! ஆனால் இவ்வயதில் நீர் என் தங்கையை விவாஹம்செய்துகொள்ள நிச்சயித்துவிட்டீரோ?

ஸுந்தரமய்யர் :—" என்னடா! 'ஓய்' 'ஈய்' என்று மரியாதையில்லாமல் பேசுகிறாய்? புத்தியில்லா மட்டி! வெளியே போ!"

சபேசன் :—" ஸ்வாமி! நான் உம்முடைய வீட்டிற்கு உண்டு களிக்க வரவில்லை. கொஞ்சம் வாயையடக்கிப் பேசும். இவ்வளவுதூரம் படித்த நீர் சற்றும் வெட்கமின்றி இவ்வயதில் 12 வயதுப்பெண் ஒருத்தியை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுவதைக் காண நீர் கேவலம் ஒருமிருகமென்றே நினைக்கவேண்டியிருக்கிறது! ஆனால் தெய்வம் உம்மை அவசியம் தண்டிக்கும்! ஹே! ஈச்வரா! என் தங்கையின் கதி இப்படியா ஆகவேண்டும்!" என்று, சற்றும் தாமதிக்காமல், வெளியே போய்விட்டான்.

* * * * *

மேற்சொன்ன சம்பவங்கள் நடந்த பதின்மூன்றாவது நாள் விவாஹ முகூர்த்தம் வைக்கப்பட்டது. தம் மாமனாரின் எளிய நிலைமையை உத்தேசித்து ஸுந்தரம் அய்யர் கல்யாணச் செலவைத் தாமே ஒப்புக்கொண்டதுமன்றி, விவாஹத்தையும் தம் வீட்டிலேயே நடத்த ஏற்பாடு செய்தார். ஆஹா! அந்தப் பதின்மூன்று தினங்களும் அம்மனுஷ்யன் அநுபவித்த சந்தோஷத்தையும், அவர் செய்த ஏற்பாடுகளையும் வர்ணிப்பது சாத்தியமல்ல!

கடைசியில் விவாஹ தினமும் வந்தது!

ஸுந்தரம் அய்யர் வீட்டு வாசலில் பெரிய பந்தல் ஒன்று போடப்பட்டு அது மிகவும் ஆச்சர்யப்படத்தக்க விதம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவர் அந்தக் கனகபுரியிலே மிகவும் பெயர்பெற்ற வக்கிலாகையால், இதரவக்கில்மார்களும், பெரிய மனிதர்களும், ஏராளமாய் வந்து கூடியிருந்தனர். செல்வச்செருக்குடன் வந்திருந்த பெண்மணிகள், தங்கள் சரீரங்கள் முழுமையும் வைரங்கள் மின்ன,



பலவிதப் பட்டுத்துணிமணிகளாலும், புஷ்பங்களாலும், சிங்காரித்துக்கொண்டு, உத்ஸாகத்துடனும், சந்தோஷத்துடனும், அங்குமிங்கும் பரபரப்புடன் போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருந்தார்கள். வெளியூர்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த, மிகவும் கியாதிபெற்ற இருஜதை மேளக்காரர்கள், இனி அக் கனகபுரியில் தங்கள் ஜாதியில் வேறு எவனும் தலைகாட்டக்கூடாதென்ற அபேக்ஷையினால், ஆர்ப்பாட்டத்துடன், தங்கள் முழுத்திறமையையும் வெளிக்காட்டி, கேட்பவர்கள் மயங்கும்விதம், பல ராகங்களையும், கீர்த்தனைகளையும் வாசித்துக்கொண்டிருந்தார்கள். இன்னும் அச்சமயம் அவ்வீட்டுக் கல்யாணக்கூடத்திற்குள் நுழைந்தவன், எவனும் அங்குக் காணப்பட்ட வைதீகர்களின் கூட்டத்தைக் கண்டு, ஆர்சரியப்படாமல் இரான்.

கடைசியில் முகூர்த்தமும் ஆரம்பமாயிற்று! அதுவரையில் வெளியிலிருந்த ஜனங்களெல்லோரும், கூடத்தில் வந்து கூடினார்கள். அவர்களில் இருவர், ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு, தாம்பூலம் போட்டவண்ணம் பேசிக்கொண்டிருந்ததை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். அதில் ஒருவர், அவ்வூரில் மிகவும் புகழ்பெற்ற டாக்டர் ஸப்தரிஷி அய்யர்; மற்றொருவர் அவ்வூர் மாஜிஸ்டிரேட் ஏசுதாஸப்பிள்ளை.

ஏசுதாஸப்பிள்ளை :—" டாக்டர்வாள்! இதென்ன அநியாயம்! ஸுந்தரம் அய்யருக்குக் கடைசிக்காலத்தில் வது மூளை இப்படி வக்கரமாய்த் திரும்பியது?"

ஸப்தரிஷி அய்யர் :—" அதை என் கேட்கிறீர்கள்? நான் அவருக்கு எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். கஷ்டம்! கஷ்டம்! எனக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கும்பொழுது மிகவும் பரிதாபமாயிருக்கிறது."

ஏசுதாஸப்பிள்ளை :—" நம் ராஜாங்கத்தில் எவ்வளவோ சட்டதிட்டங்களிருந்தும், இப்படி இவ்வயதில் சிறிதும் வெட்கமின்றி விவாஹம் செய்துகொள்ள முன்

வரும் பாபிகளைத் தண்டிக்கச் சட்டமில்லாமற் போனது மிகவும் பரிதாபப்படத்தக்கதே!"

ஸப்தரிஷி அய்யர்:—"அதுமட்டுமா? விவாஹம் செய்துகொள்ள இருக்கும் ஒவ்வொருவரும், முதலில் அவர் விவாஹம் செய்துகொள்ளத் தகுதியா இல்லையாயென்பதற்கு டாக்டர் ஸர்டிபிகேட் வாங்கவேண்டுமென்ற சட்டமிருக்கும்பக்ஷத்தில் இக் கல்யாணம் நடக்குமா? பிள்ளைவாள்! உங்களுக்கு ஸௌந்தரம் அய்யர் வயதானவர் என்பதுமட்டுந்தான் தெரியும். அவருக்குள்ள வியாதியைத் தாங்கள் அறிந்தால் இன்னும் ஆச்சர்யப்படுவீர்கள்!"

ஏசுதாஸப்பிள்ளை:—"அதென்ன? எனக்கொன்றும் தெரியாதே!"

ஸப்தரிஷி அய்யர்:—"வெட்கக்கேடு! அந்த மனுஷ்யனுக்கு ஹிருதயத்திலிருக்கும் கோளாறு பயங்கரம்! இப்பொழுதுதான் பத்துநாளுக்குமுன் செத்துப் பிழைத்தார். அவர் ஜீவித்திருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் ஆச்சரியப்படத்தக்கதே!"

நிற்க, வரவர, வீட்டில், கூச்சலும் அட்டஹாசமும் அதிகரித்துக்கொண்டே வந்தன. பெண்மணிகள் ஒருவரையொருவர் பரிஹஸிப்பதும் பிறகு கலகலவென்று நகைப்பதும், நடுவில், மணையிலுட்கார்ந்திருக்கும் தம்பதிகளைப் பார்த்துக் குசுகுசுவென்று பேசுவதுமாயிருந்தார்கள். அதில் மிகவும் முக்கியமாய்க் காணப்பட்டவள் கல்யாணப் பெண்ணின் தாயாராகிய தையு அம்மாளே என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அவள் நடுவில் திடீரென்று தன் மூக்கைச் சிந்தினாள். மறுநிமிஷம், தன் நேத்திரங்களிலிருந்து, நீரைத் தாரைதாரையாய் வெளியாக்கினாள்! அதற்குக் காரணம், அவ்வளவு விமரிசையுடன் நடக்கும் அக்கல்யாணத்தில் அவளுடைய புத்திரனாகிய சபேசன் இல்லாததே! சபேசன், அன்று தன் தந்தையுடன் சண்டையிட்டுவிட்டுப் போனவன், சென்ற இடம் தெரியவில்லை! ஆனால், இதனால் தையு அம்மாளுக்குண்டான வருத்தம், மறுநிமிஷம், அவளுடைய கண்களின் பார்வை மணையிலுட்கார்ந்துகொண்டிருந்த தன் பெண்ணின்மேல் ஜ்வலித்த வைர நகைகளின்மீது விழவே, பறந்தோடிவிட்டது! நம் ராம தீக்ஷிதரோ, தம் மாப்பிள்ளையால் தமக்களிக்கப்பட்ட, விலையுயர்ந்த ஜரிகைவேஷ்டிகளை நாகரீகத்துடன் உடுத்திக்கொண்டு, அட்டஹாசத்துடன் காணப்பட்டார்! இன்னும் தாம் அவ்வளவு அந்தஸ்துள்ள ஒருவருக்கு மாமனாராய்விட்டதால், இனித் தம் வைதீகத் தொழிலைச் செய்வது அகௌரவமென்று நினைத்து அதை அத்துடன் விட்டுவிடத் தீர்மானித்துவிட்டார்!



கடைசியில் தாலியும் கட்டியாய்விட்டது! பிறகு முக்கியரான புரோஹிதர், தம்பதியைச் சபையிலுள்ள பெரியோர்களுக்கு நமஸ்காரம் செய்யும்படி சொல்லவே, ஸௌந்தரம் அய்யர் நடுங்கும் தம் காத்தினால், தம் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு பலபேரை நமஸ்கரித்தார். எல்லோரும் சிறிதும் தயங்காமல், கல்யாணப் பெண்ணைத் "தீர்க்க சுமங்கலீபவ!" என்று ஆசீர்வதித்தனர். ஆனால் மறுநிமிஷம் நேரிடக்கூடிய விபத்தை யாரறிவார்! அந்தோ, நடந்துகொண்டே இருந்த ஸௌந்தரம் அய்யர், திடீரென்று, சற்றுநேரம், தரையை ஊற்றுநோக்கியவண்ணம் நின்றார். மறுவினாடி, தம் இரு கரங்களாலும், தம் மார்பையழுத்திக்கொண்டு, "ஐயோ!" என்று வீறிட்டலறியவண்ணம் தொப்பென்று தரையில் விழுந்தார்!

அச்சமயம் அங்கிருந்த கலவரத்தையும், குழப்பத்தையும், நம் நேயர்கள் ஊஹித்துக்கொள்வதே நலம்!

நல்லவேளையாய்ச் சபையிலிருந்த டாக்டர், ஸப்தரிஷி அய்யர் வேகமாய் ஓடித் தரையில் கிடந்த ஸௌந்தரம் அய்யரின் பக்கத்தில் மண்டிபோட்டுட்கார்ந்துகொண்டு, ஒருநிமிஷநேரம் அவரைப் பரிசோதித்துப் பார்த்தார். அந்த ஒரு நிமிஷநேரம் வரையில், அங்கிருந்த ஒரு நிச்சப்தமும், எல்லோருடைய முகங்களிலும் காணப்பட்ட ஆவலும், அவச

ரமும், வியக்கத்தக்கவை! அதன் முடிவில், ஸப்தரிஷி அய்யர் தம் தலையைத் தூக்கி, சமீபத்தில் ஒன்றும் தெரியாமல், நடுங்கியவண்ணம், நின்றுகொண்டிருந்த, ராஜத்தைச் சொல்லமுடியாத வருத்தத்துடனும், அநுதாபத்துடனும் நோக்கினார். அச்சமயம் அவருடைய கண்களிலிருந்து இருமுத்துக் கண்ணீர் வெளிக்கிளம்பி, அவருடைய கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தன. அதற்குள் பலபேர்கள், அவருடைய தோள்களைப்பற்றிக் குலுக்கிக்கொண்டே,

" டாக்டர்வாள்! என்ன சமாசாரம்?" என்று வினவ, ஸப்தரிஷி அய்யர், பெருமூச்செறிந்துகொண்டே,

"ஸுந்தரம் அய்யருடைய காலமாய்விட்டது!" என்று விடையளித்தார்.

" மணஅணி அணிந்த மங்கை, ஆங்கே,
பிணஅணி அணியும் பெண்என லானாள்,
இதுவோ சிறந்த மணம்எனப் படுவது?
ஈன்றோர் கடன்மை ஏற்குமோ பாரீர்!
காதலின் மணமும் கலந்திடப் பெறாத
பாலர் இருவரைப் பதிஸதி என்றிடச்
சேர்த்து வைத்தழித்தலும் சீருடைத் தன்றே."

---

## அத்தியாயம் 2.

முதல் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்து இரண்டு வருஷங்களாய் விட்டன!

ஒருநாள் மாலை சுமார் ஆறுமணியிருக்கும்.

அச்சமயம், கனகபுரிக் கல்யாணிப் படித்துறையின் சமீபத்திலே காவேரி மணலிலுட்கார்ந்துகொண்டு, சில வாலிபர்கள், கைம்பெண்களின் மறுவிவாஹத்தைப்பற்றியும்,



இன்னும் சமீபத்தில், சென்னைவாஸியாகிய, ஒரு மாது சிரோமணியால், சட்டசபையில் கொண்டுவரப்படுந்தறுவாயிலிருந்த, பெண்களின் விவாஹவயதை உயர்த்தவேண்டுமென்ற பிரேரேபணையைப் பற்றியும், அதன் பலனாய், அவ்வூரில் சில தினங்களுக்குமுன், பிராமண ஜாதியைச் சேர்ந்த, சில மகான்களால் கூட்டப்பட்ட ஒரு சபையில் நடந்த பிரஸங்கங்களைப் பற்றியும், மிகவும் உத்ஸாகத்துடனும், ஊக்கத்துடனும், சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வாலிபக் கூட்டத்தில், மற்ற எல்லோரைக் காட்டிலும், மிகவும் ஆத்திரத்துடனும், ஆனால், தன் அபிப்பிராயங்களுக்குச் சாதகமாய், ஒப்பத்தகுந்ததும், நியாயமானதுமான காரணங்களை எடுத்துக்காட்டியும் பேசிக்கொண்டிருந்தது, நம் ராம தீக்ஷிதரின் புதல்வனாகிய சபேசனைத்தவிர வேறல்ல! ஒருவன்,

" எண்டா! சபேசா, நேற்று அச்சபையிலிருந்த வக்கில் ஒருவர், இவ்விதப் பிரேரேபணையைக் கொண்டுவர அந்தம்மாளுக்கு யாதொரு பாத்தியமுமில்லை என்று சொன்னாரே! என்ன வெட்கக்கேடு பார்த்தாயா?" என்றான். அதற்குச் சபேசன்,

" ஆஹா! அதை நான் மறக்கமுடியுமோ? அவர், இவ்விதம் பேசியதற்குக் காரணம், அவருக்கு நம் பிராமணஜாதியில் உள்ள மெச்சத்தக்க ஒரு விச்வாஸமும், மரியாதையுமே என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், இப் பிரேரேபணையைக் கொண்டுவர அம்மாது சிரோமணி பிரயத்தனப்படுவதற்குக் காரணம், அதைக் கொண்டுவருவதின் பலனாய், நம்பிராமணஜாதியின் கௌரவத்தையும், மதிப்பையும், அழித்துவிடவேண்டுமென்ற அபேக்ஷையல்லவென்பதையும், அப் பிரேரேபணையில், எவ்வளவு பிசகும், ஆபத்துகளும், இருந்தபோதிலும், அந்தம்மாள், அதன் பலனாய், நம் நாட்டுப் பெண்களின் நன்மையையும் முன்னேற்றத்தையுமே கோருகிறாளென்பதையும், இவ்வளவு படித்திருந்தும் அவ் வக்கில் அறியா

மற்போனது வருந்தத்தக்கதே!" என்றான். மூன்றாவது வாலிபன்,

"அடே! அதெல்லாம் போகட்டும்! ஒரு பேர்வழி, நம் பிராமணஜாதிக்கு விரோதிகள் இப் பிராமணஜாதியிலேயே பிறந்த சிலருண்டென்றும், அவர்கள் அவ்விதம், தங்களுடைய ஜாதியின் கட்டுப்பாடுகளுக்கு முழுமையும் விரோதமாய்த் திரும்பியதற்குக் காரணம், இந்த ஆங்கிலேயப் படிப்பே என்றும் சொன்னதை நீ இதற்குள் மறந்திருக்கமாட்டாய்! அந்த ஆசாமி யாரென்பது உனக்குத் தெரியுமோ?" என்று கேட்கச் சபேசன்,

"நன்றாய்த் தெரியும்! அவர், இந்த ஆங்கிலேயப் படிப்பின் உச்சியைக் கண்டுபிடித்ததுமன்றி, இப் படிப்பை, நம் நாட்டு வாலிபர்களுக்குச் சொல்லிக்கொடுத்துக் கீர்த்தி பெற்றிருப்பவர்!" என்று சிரித்தான்.

இவ்விதம் வரவர அதிகரிக்கும், இவர்களுடைய உத்ஸாகத்தையும், அதன் பலனாய் அவர்களிட்ட கூச்சலையும் கண்டு, தங்கள் மாலைக்கடன்களைச் செய்யும்பொருட்டு அச்சமயம் அங்கு வந்த சில பெரியோர்கள், அவர்களுடைய சம்பாஷணையைக் கவனிக்கலானார்கள். அவர்களில் சிலர், அவ்வாலிபர்கள் இவ்விதம் பேசுவதற்குக் காரணம் பால்யத்தின் பலனாயிருக்கக் கூடிய, ஒரு திமிரும் அதிகப்பிரஸங்கித்தனமுமே என நினைத்து, அவர்களுடன் வாக்குவாதம் செய்து, அவர்களை அவமானப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன், அச்சம்பாஷணையில் கலக்கலானார்கள். அவ்வாலிபர்களை எளிதில் வெல்ல, தாங்கள் கற்ற சாஸ்திரங்களின் மூட்டையை அவிழ்ப்பதே உசிதமென நினைத்து, அவர்கள் சற்றுமறியக்கூடாத பல சுலோகங்களையும், இன்னும் ராமாயண மஹாபாரதங்களில் கூறப்பட்ட பல கதைகளையும் எடுத்துச் சொல்லலுற்றனர். ஆனால் வாலிபர்கள் ஆங்காங்கு அவர்கள் மறுக்கமுடியாத பல காரணங்களை எடுத்துக் காட்டினார்கள். அதில் நம் சபேசன், வாக் சாதுர்யத்தையும், இன்னும் அவன், தான்



பெரியோர்களுடன் பேசுகிறோமென்பதையுணர்ந்து அவர்களுக்கு வைத்த ஒரு மரியாதையையும், ஆனாலும், சாஸ்திரங்களையே நம்பியிருந்த அப் பெரியோர்கள் சற்றும் முண்டமுடியாதவகையில் அவன் தர்க்கம்செய்த அழகையும் கண்டு அங்கிருந்தவர்களில் ஆச்சர்யப்படாதவர்கள் ஒருவருமில்லை. கடைசியில் பெரியோர்கள் வாலிபர்களை ஜயிப்பது முடியாத கார்யமென்று கண்டுகொண்டார்கள். ஆனாலும் தங்களுடைய அபஜயத்தை ஒப்புக்கொள்ள இஷ்டப்படாமல், கோபத்துடன் அவ்விடத்தை விட்டெழுந்து, ஒரேவாக்காய், "இதுகள் சுத்த தத்தாரிகள்! நாம் இதுகளுடன் பேசப்போனது, நம்மேல் பிசகு!" என்று கோஷமிட்டுக்கொண்டே நழுவிவிட்டார்கள்.

வரவர, வாலிபர்களுடைய கூட்டமும் கலைந்தது. ஆனால் மற்ற எல்லோரும் போய்விட்டபோதிலும், நம் சபேசன்மட்டும் உட்கார்ந்துகொண்டே இருந்தான்.

இங்கு இதுவரையில் ஒருவிஷயம் சொல்ல மறந்துவிட்டோம். அதாவது, அவ்வாலிபர்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து பத்தடி தூரத்தில், தனிமையில்உட்கார்ந்துகொண்டு, சுமார் 19 வயதுள்ள ஒரு அழகிய யுவன்; அவர்களுடைய சம்பாஷணையை, அதுவரையில் கவனித்துக்கொண்டேயிருந்தான். கடைசியில் அவன் புன்சிரிப்புடன் தன்னிடத்தை விட்டெழுந்து, சபேசனையணுகி,

"ஸார்! நான் சற்று உங்களுடன் பேசப் பிரியப்படுகிறேன்!" என்றான்.

சபேசன் ஆச்சர்யத்துடன், அவ்வாலிபனை உற்று நோக்கியவண்ணம், "அப்படியா? ஏன் நிற்பானேன்? இதோ இங்கு உட்கார்ந்துகொள்ளுங்கள்," என்று மரியாதையாய்ச்சொல்ல, அவ்வாலிபன், சமீபத்தில் உட்கார்ந்துகொண்டான். பிறகு,

"நான் இதுவரையில் உங்களுடைய கூட்டத்தில் சேராமல் தனிமையிலுட்கார்ந்திருந்ததற்குக் காரணம் நீங்

கள் பேசியது தவறென நான் நினைத்தேன் என்பதல்ல! இன்னும் நீங்கள் பேசியதைக்கண்டு மிகவும் மெச்சினேன்! என்றான்.

சபேசன் :—"மிகவும் சந்தோஷம். நான் உங்களுடைய பெயரைத் தெரிந்துகொள்ளலாமோ?"

வாலிபன் :—"என் பேயர் ராஜேந்திரன்!"

சபேசன் :—"தற்சமயம் நான் உங்களுக்குச் செய்யக்கூடியதென்ன?"

வாலிபன் :—"அப்படி ஒன்றுமில்லை. சமீபத்தில் நம் ஊரில் ஒருவர், இக்கைம்பெண் விவாஹத்தைப் பற்றியும், இன்னும் நம் ஜாதியிலுள்ள பல அனுவசியமான கட்டுப்பாடுகளைப் பற்றியும், சில புஸ்தகங்கள் ஆங்கிலேயத்தில் எழுதப்போவதாயும், அக்கார்யத்தில் தமக்குதவிசெய்ய, நன்றாய்ப்படித்த ஒரு வாலிபன் தேவையென்றும் சில தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருப்பதை நீங்கள் அறிவீர்களோ?"

சபேசன் :—"ஆகா நன்றாய்த் தெரியும். இன்னும் நான் அவரை நேரில்காண மிகவும் ஆவலுடனிருக்கிறேன்."

வாலிபன் :—"அப்படியானால், ஏன் தாமதமன்னியில் நீங்கள் அவரைப்போய்ப் பார்க்கக்கூடாது? நீங்கள் மட்டும் அவரைப் போய்க் காணும்பக்ஷத்தில் அவர் கண்டிப்பாய் உங்களை ஏற்றுக்கொள்ளுவார்."

சபேசன் :—"மிஸ்டர் ராஜேந்திரன்! நான் அவரைப் பார்க்க ஆவலுடனிருப்பதற்குக் காரணம், அவர் என்னை அங்கிகரிப்பார் என்ற ஒரு தைரியத்தினாலல்ல! நம்மூரில், பி.ஏ. பரீக்ஷையில் தேறியவர்கள் வேலையின்றி நூற்றுக் கணக்கிலிருக்கும்பொழுது, நான் இதில் ஆசைவைப்பது அசட்டுத்தனம். தவிர, எனக்கு அவரை முன் பின் தெரியாது. ஆனால் என் தற்கால நிலைமையை உத்தேசிக்கும்பொழுது எனக்கு இவ்வேலை கிட்டுமானால் மிகவும் நல்லதே!"



வாலிபன்:—"மிஸ்டர் சபேசன்! நீங்கள் அவருடைய சுபாவத்தை அறியாததால் இப்படிப் பேசுகிறீர்கள். அவர் பி.ஏ. பட்டத்தையும், எம். ஏ. பட்டத்தையும் கண்டு மயங்குகிறவரல்லர். அவருடைய குணம் எனக்கு நன்றாய்த் தெரியும்!"

சபேசன் :—"அப்படியா? அவர் உங்களுக்கு ஏதேனும் உறவுண்டோ?"

வாலிபன்:—"நான் இதுவரையில் இவ்விஷயத்தை ஒளித்ததற்கு மன்னிக்கவேண்டும். அவர் என்னுடைய தந்தையே!"

இதைக் கேட்டதும், சபேசனுக்குண்டான சந்தோஷத்திற்கும் ஆச்சர்யத்திற்கும் அளவில்லை. கொஞ்சநேரத்திற்கெல்லாம், ராஜேந்திரன்,

"சரி! நாழியாய்விட்டது. நான் போய்வருகிறேன். நீங்கள் அவசியம் நாளைக் காலையில் வந்து என் தந்தையைப் பாருங்கள். இன்று இரவு நானும் அவரிடம் உங்களைப் பற்றிப் பேசுகிறேன். ஸார்! நீங்கள் இதில் சிறிதும் சந்தேகப்படவேண்டாம். அவர் சந்தோஷத்துடன் உங்களை அமர்த்திக்கொள்ளுவார். உங்களுக்கு என் வீடு தெரியுமென்றே நினைக்கிறேன்." என்று சொல்லிவிட்டு, விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

ராஜேந்திரன் போனபிறகு, சபேசன் கொஞ்சநேரம் சிந்தனையுடன் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்திலேயே முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்து இரண்டு வருஷங்களுக்கு மேலாய்விட்டதென்பதைச் சொல்லிவிட்டோம். எனவே, அந்த இரண்டு வருஷங்களுக்குள், ராம தீக்ஷிதரின் குடும்பத்தில் நடந்த விஷயங்களைக் கவனிக்கவேண்டியது அவசியம். தீக்ஷிதரும், அவருடைய மனைவியாகிய தையு அ[illegible]களுடைய புதல்வன் எவ்வளவோ சொ[illegible]போசிக்காமல்

183767.

தங்கள் பெண் ராஜத்தை அவ்விதம் ஐம்பது வயதுள்ள ஸௌந்தரம் அய்யருக்கு விவாஹம் செய்து வைத்தது மிகவும் பிசகே! ஆனால், அவர்கள் அப்படிச் செய்ததற்குக் காரணம் அவர்களுக்கு ராஜத்தின் மேலிருந்த பிரியமும், அப் படுபாபி ஸௌந்தரம் அய்யரின் டாம்பீகமும் சாமர்த்தியமுமான பேச்சுமே என்பதை நம் நேயர்கள் அறிந்துகொள்ளவேண்டும். அவ்விதம் அவர்கள் சற்றும் எதிர்பார்க்காதவிதம், ராஜம் தன் விவாஹதினத்தன்றே தன் புருஷனை யிழந்து வைதவ்யமடைந்ததைக் கண்டு, அதேவருத்தத்தால் மனமுடைந்து, படுக்கையில் படுத்தவர்கள் அதைவிட்டெழுந்திருக்காமல், ஒரு வருஷத்திற்குள் பரலோகம் சென்றார்கள். அதன் பலனாய், தன் தமையனே கதியென்று விடப்பட்டவளும், இன்னும் தான் கைம்பெண் என்பதை உணரச் சக்தியற்றவளுமான நம் ராஜத்தின் பரிதாப நிலைமையை விவரிக்கவும் வேண்டுமோ? ஆனால், உத்தம வாலிபனாகிய சபேசனைத் தன் தமையனாக அடைந்தமட்டில் அவள் அதிர்ஷ்டசாலினியென்றே சொல்லவேண்டும். சபேசன், தன் தங்கை தான் கைம்பெண் என்பதையும், அதன் பலனாய் அவள் படக்கூடிய வருத்தங்களையும், அவள் சற்றும் உணராதவகையில் அவளை வைத்து ரக்ஷிப்பதே தன் கடமைகளில் முக்கியமென நினைத்து வந்தான். ஆனால், தற்சமயம் அவன் மிகவும் தரித்திர நிலைமையில் இருந்தானென்பதை நம் நேயர்களே ஊகித்திருப்பார்கள். தன் பெற்றோர்கள் இறந்ததும், இனி தான் படிப்பது முடியாத கார்யமென அறிந்து, தன் ஜீவனத்துக்காக, ஒரு உத்தியோகத்தை அடையும்பொருட்டு அவன் பட்ட கஷ்டங்களை யெடுத்து எழுதுவது வருத்தத்தைத் தரும். ஆனாலும், தைர்யத்தை விடாமல், எப்படியோ பல வித வேலைகளைச் செய்து தன் குடும்பத்தை நடத்திக் கொண்டுவந்தான். ஆகவே, அன்று மாலை அவன் ராஜேந்திரனைக் கண்டு பேசியதின் பலனாய்த் தனக்கு அவன் தந்தை பிரசுரம் செய்திருந்த [illegible] கிடைக்க வழியுண்டென்பதையறிய [illegible] இருக்கமுடியுமோ?



கடைசியில் சமீபத்திலிருந்த மடத்தில் மணி எட்டு அடிக்கும் சப்தம் அவன் செவிகளில் விழத் திடுக்கிட்டவனாய் அவ்விடத்தை விட்டெழுந்து துரிதமாய்த் தன் வீட்டை நோக்கி நடந்தான். சுமார் கால்மணி நேரத்திற்கெல்லாம், அவன் தன் வீட்டுக்குள் நுழைந்தபொழுது, அவன் தங்கை ராஜம், அவனை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தாள்.

தற்சமயம் ராஜத்துக்கு வயது பதினான்கு என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அதற்குள் அவள் காண்போர் மயங்கும் விதம் வளர்ந்திருந்தாள். ஆனால், அழகிய அவளுடைய வதனம், வருத்தத்தாலும் கவலையாலும் வாடியேயிருந்தது. அந்தோ! இன்னும் அவள் தன் நிலைமையை உணராமலிருக்கமுடியுமோ? ஆனாலும், தன் தமையன் அவ்வளவுதூரம் கஷ்டப்படுவதற்குக் காரணம் தானேயென்பதையும், அவன் தன்மீது அளவுகடந்த பிரியத்தை வைத்திருக்கிறானென்பதையும் அவள் நன்கறிந்தவளாகையால் அவன் முன்பு, தன் வருத்தத்தைக் காட்டிக்கொள்ளுவது பிசகென நினைத்து, அதுவரையில் தன் முகத்தில் காணப்பட்ட விசனக்குறிகளை மிகவும் மெச்சத்தகுந்தவிதம் மறைத்துக்கொண்டு, பிரியத்துடன்,

‘‘அண்ணா! ஏது இன்று இவ்வளவு நாழியாய்விட்டது?’’ என்று வினவ, சபேசன்,

‘‘அம்மா! ராஜம்! இன்று ஒரு நல்லசெய்தி கொண்டு வந்திருக்கிறேன்’’ என்றான்.

அதைக்கேட்டதும், அப்பெண்மணி, ஆவலுடன்,

‘‘என்ன? என்ன விசேஷம்?’’ என்றுகேட்க, சபேசன்

‘‘நேற்று நான் உன்னிடம், நம்மூரில், தாண்டவம் ஐயர் என்ற வக்கில் ஒருவர், தாம் சில புஸ்தகங்கள் எழுதப்போவதாயும், அக்காரியத்தில் தமக்குதவிபுரிய மாதம் 50 ரூபாய் சம்பளத்தில் ஒரு வாலிப......’’ என்று அவன் மேலே பேசுமுன், ராஜம் அவசரம் தாங்கமாட்டாமல்,

"ஆமாம்! அது எனக்குத் தெரியும்! ஆனால், அவ்வேலை உனக்குக் கிடைத்துவிட்டதோ?" என்று வினவினாள்.

"இன்னும் கிடைக்கவில்லை! ஆனால், அவசியம் கிடைக்குமென்று நம்புகிறேன். இன்று மாலை அவருடைய புத்திரனைக் காவேரிக்கரையில் கண்டேன். அவன் தன் தகப்பனாரிடம், என்னைப்பற்றிச் சிபார்சுசெய்வதாயும், இன்னும், அவர் என்னைக் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளுவாரென்றும் கூறினான். காலமே, அவனைப்போய்ப் பார்க்கலாமென்றிருக்கிறேன்." என்று சபேசன் விடையளித்ததும், ராஜம்,

"அண்ணா! தெய்வம் இவ்விஷயத்தில் நமக்கு அவசியம் உதவிசெய்யும் என்று நினைக்கிறேன். வா! வா! சமையல் ஆறிப்போய்விடும்! சாப்பிட்டுக்கொண்டே, பாக்கிச் சமாசாரங்களைச் சொல்!" என்று சொல்லிக்கொண்டே சமையலறையை நோக்கி நடந்தாள். ஆஹா! அவ்வறையிலிருந்த சுத்தத்தையும், இன்னும் அவள், அங்குக் காணப்பட்ட பாத்திரங்களைப் பளபளவென்று தேய்த்து, வரிசை வரிசையாய் வைத்திருந்த அழகையுங்கண்டு ஆச்சர்யப்படாமலிருக்க முடியாது! பரபரப்புடன், தன் தமையனுக்கு, இலையைப் போட்டு அன்புடன் பரிமாறினாள். சபேசன் சாப்பிட்டான பிறகு,

"அம்மா! ராஜம்! இன்று ஆடிவெள்ளிக்கிழமையாகையால், ஸ்வாமிதர்சனம் செய்துவிட்டு வரலாமென்றிருக்கிறேன். நான் திரும்பிவரும்வரையில், உனக்கு வீட்டிலே தனியாயிருக்கப் பயமாயிருந்தால், போய் அடுத்தவீட்டுப் பாட்டியுடன் பேசிக்கொண்டிரு. நான் வந்ததும், உன்னைக் கூப்பிடுகிறேன்!" என்றான். ராஜம்,

"இந்தத் தெருவில் பயமென்ன? நீ போய்விட்டுச் சீக்கிரம் வந்துவிடு!" என்று சொல்ல, சபேசன்,

"இதோ, அரைமணி நேரத்திற்குள் வந்துவிடுகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டு வெளியே சென்றான்.



நிற்க, நித்யபுரீசுவரஸ்வாமி கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் வயதுமுதிர்ந்த ஒரு அமங்கலி அம்மாளின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சுமார் பதினாறு வயதுள்ள, ஒரு அழகிய பெண்மணியைக் கவனிப்போம். அவளுடைய முகத்தின் கம்பீரத்தோற்றத்தையும், அவளுடைய சரீரத்தின்மீது ஜ்வலித்துக்கொண்டிருந்த வைரங்களையும் நோக்குமிடத்து, அவள் ஒரு பெரிய தனவந்தரின் வீட்டுப் பெண் என்பதை எளிதில் கண்டுகொள்ளலாம். அவள் தன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அமங்கலியம்மாளைப் பார்த்து, கவலையும், அவசரமும் கலந்த குரலில்,

"பாட்டி! இனி நாம் இங்குத் தாமதிப்பது பிசகு. மணி ஒன்பதுக்கு மேலிருக்கும்போல் தோன்றுகிறது. வா! வா! போவோம்!" என்று அழைக்க, அப்பாட்டி,

"என்னடி! இதோ இன்னும் பத்து நிமிஷத்தில் தீபாராதனை நடக்கும். இவ்வளவு நாழி காத்துக்கொண்டிருந்துவிட்டு, அதைப் பார்க்காமல் போவாளோ?" என்றாள்.

அப்பெண்மணி வருத்தத்துடன், "நான் உன்னுடன் வந்ததே பிசகு! நான் இன்று கோவிலுக்கு வருவதில் அப்பாவுக்குச் சற்றும் இஷ்டமில்லை. அவர் என்மேல் கண்டிப்பாய்க் கோபிப்பார்!" என்று சொல்லவே,

"அவன் ஒன்றும் சொல்லமாட்டான். அப்படி அவன் கோபித்துக்கொண்டால் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்." என்று பாட்டி தைர்யம் சொன்னபோதிலும், அப்பெண்மணி,

"அதென்னவோ, எனக்கு அதிக பயமாயிருக்கிறது. நான் இங்கே இவ்வளவு கூட்டமிருக்குமென்று நினைக்கவேயில்லை. இதில் நாம் ஒழுங்காய் வீடுபோய்ச் சேருவோமென்று எனக்குத் தோன்றவில்லை!" என்றாள். அவளுடைய கலவரத்தையும் அவசரத்தையுங்கண்ட பாட்டி, இனி அவளுடைய இஷ்டத்திற்கு விரோதமாய்த் தாமதம் செய்வது பிசகென நினைத்தவள்போல், "அப்படியானால் வா,

போவோம்!" என்று சொல்ல, இருவரும், அவ்விடத்தை விட்டுக் கிளம்பினார்கள். ஒருவழியாய்ப் பிராகாரத்தைக் கடந்து அவர்கள் வெளிச்சந்நிதிக்குள் நுழைந்தபொழுது அங்குக் காணப்பட்ட கூட்டத்தையும், அதில் சிலருடைய அட்டகாசத்தையும் கண்டு திடுக்கிட்டார்கள். சரீரமுழுமையும் வியர்வை ஒழுக, ஒருவர்மேல் ஒருவர் விழுந்தவண்ணம், ஆண் பெண் என்ற விவஸ்தையின்றி, ஜனங்கள் திரள்திரளாக, உள்ளே வந்துகொண்டிருந்ததால் நம் பாட்டியும், அப்பெண்மணியும் வெளியே செல்வது மிகவும் கஷ்டமாயிருந்தது! இரண்டடிதூரம் அவர்கள் முன்போகும்பக்ஷத்தில் பத்தடிதூரம் பின்தள்ளப்பட்டார்கள். இன்னும் சிறு பெண்களின்மீது தங்கள்சரீரம் படுவதற்கு அதுவே சமயமென நினைத்து அங்கு வந்திருந்த சில தடியர்கள், அழகிய பெண்களைக் கண்டதும் ஏதோ தங்கள் பின்னாலிருப்பவர்கள் தங்களைப் பிடித்துத் தள்ளுவதுபோல் பாசாங்குசெய்து அவர்கள்மேல் சற்றும் வெட்கமில்லாமல் விழுவதைக் கண்டதும், நாம் சொன்ன பெண்மணி நடுங்க ஆரம்பித்தாள். ஆனால், அவளுடன்கூட வந்த பாட்டி, வயதுமுதிர்ந்தவளாகையாலும், அக்காரணத்தால், சாதாரணமாய்ச் சிறு பெண்களுக்கிருக்கக்கூடிய கூச்சமும், பயமும் அதிகமிருக்க நியாயமில்லையாகையாலும், எப்படியோ முண்டிக்கொண்டு முன்போய்விட்டாள். எனவே, பாதிதூரம் அவளுடைய வலதுகரத்தைப் பிடித்துக்கொண்டேபோன அம்மங்கை, இனித் தான் அப்படிச்செய்வது சாத்தியமில்லையெனக் கண்டு, எதிரில் புருஷர்களைக் காணும்பொழுதெல்லாம், பக்கத்தில் ஒதுங்கிக்கொள்வதும், பிறகு முன்செல்லச் சற்று இடைவெளி உண்டானதும் நடப்பதுமாயிருந்தாள். இவ்விதம், பாட்டிக்கும் அவளுக்குமிடையிலுள்ள தூரம் அதிகரித்துக்கொண்டே வந்தது. கடைசியில், அவள் எப்படியோ, சந்நிதியைத் தாண்டி வெளியே வந்தபொழுது, அக்கிழவி எங்கும் காணப்படவில்லை. பயத்தினாலும், இன்னும் மேலே என்னசெய்வதெனத் தெரியாததாலும், கைகால்கள் நடுங்க, கலவரப்பார்வையுடன், நாலு



பக்கங்களிலும், அப்பாட்டியைத் தேடியவண்ணமிருந்தாள்.

"ஐயோ! தெய்வமே! நானென்ன செய்வேன்? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! இன்று அவசியம் எனக்கு ஏதோ அபாயம் நேரிடப்போகிறது!" என்று மனங்குழம்பினாள். இவ்விதம் சுமார் பத்துநிமிஷநேரம், தயங்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தவள், அதன்முடிவில் சமீபத்தில் யாரோ, "அம்மா! அம்மா!" என்று அழைக்கும் சப்தம் அவளுடைய செவிகளில் விழவே, "ஆஹா! இது எங்கள்வீட்டு வேலைக்காரன் வீராசாமியின் குரலல்லவோ?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, பரபரப்புடன் நாலாபக்கங்களையும் கவனித்தாள். கடைசியில் அவள் எண்ணியதுபோலவே, சமீபத்தில் வீராசாமி, ஆவலுடன் தன்னைநோக்கி வந்துகொண்டிருப்பதைக் காண,

"அப்பாடா! நான் தப்பினேன்!" என்று சொல்லொணாச் சந்தோஷத்துடன் பெருமூச்செறிந்துகொண்டு, "அடே! வா! வா! நல்ல சமயத்தில் வந்தாய். ஏண்டா! எங்காவது என் பாட்டியைக் கண்டாயோ?—" என்று பேசிக்கொண்டேயிருந்தவள், வீராசாமியின் முகத்தையுற்றுநோக்கியதும் திடுக்கிட்டவளாய்ப் பேச்சை நிறுத்திவிட்டாள். பிறகு கவலையுடன், "ஏண்டா! என்ன சமாச்சாரம்?" என்று வினவ, வீராசாமி,

"அம்மா! வாருங்கள்! வாருங்கள்! நான் சென்ற ஒருமணிநேரமாய், உங்களையே தேடிக்கொண்டிருக்கிறேன்!" என்றான்.

அப்பெண்மணி அதிகரிக்கும் பயத்துடனும் கவலையுடனும், "ஏண்டா? நடந்த விஷயமென்ன? சீக்கிரம் சொல்!" என்று கேட்க, வீராசாமி தடுமாற்றத்துடன்,

"அம்மா! நான் விஷயத்தை ஒளிப்பதில் பிரயோஜனமில்லை. தற்சமயம், பெரிய எஜமான் ஆஸ்பத்திரியில் சாகுந்தறுவாயிலிருக்கிறார்." என்று விடையளித்தான்.

இதைக் கேட்டதும் அப்பெண்மணி திடீரென்று தன் தலைமேல் இடிவிழுந்தவள்போல் காணப்பட்டாள். சுமார், ஒரு நிமிஷநேரம்வரையில், பேசவும் சக்தியற்றவளாய் மரம்போல நின்றாள். பிறகு பதறிய மனதுடன்,

"ஏண்டா! அவருக்கென்ன நேர்ந்தது? நான் வீட்டைவிட்டுக் கோவிலுக்குப் புறப்படும்பொழுது அவருக்கொன்றுமில்லையே!" என்று கேட்க, வீராசாமி,

"வாஸ்தவமே! ஆனால் நீங்கள் போனதும், அவரும் வெளியே போகத் தயாராய் மாடியிலிருந்து கீழே இறங்கும்பொழுது தடுக்கிப் படிகளில்விழ, அவர்மண்டை உடைந்துவிட்டது. உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனோம். அவருடைய காயத்தைப் பரீக்ஷித்துப்பார்த்த டாக்டர், அவர் பிழைப்பது அசாத்தியம் என்று சொல்லிவிட்டார். உங்களுடைய தமையன்மார்கள் இருவரும் அங்கிருக்கிறார்கள். அவர்கள் உடனே உங்களை அழைத்துவரும்படி சொன்னார்கள். வாருங்கள்! வாருங்கள்! இதோ வண்டி கொண்டு வந்திருக்கிறேன்." என்றான்.

அப்பெண்மணி, "ஹா! தெய்வமே! நான் என் தந்தையை உயிருடன் காண்பேனோ!" என்று கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய்க் கொட்ட, தேம்பித் தேம்பி அழுதவண்ணம் ஓடி அவ்வேலைக்காரன் காண்பித்த வண்டியிலேறியுட்கார்ந்துகொள்ளவே, அது உடனே புறப்பட்டது.

சற்று நேரத்திற்கெல்லாம், அவ்வண்டி, கடைத்தெருவும், பெரியதெருவும் சேருமிடத்திற்கு வந்துசேர, அங்குக் கூட்டம் ஏராளமாயிருப்பதைக் கவனித்து, வீராசாமி, பக்கத்திலிருந்த வண்டிக்காரனை "அடே! பெரியதெருவழியாய் ஓட்டு!" என்று சொல்ல, வண்டிக்காரன், அப் பக்கம் வண்டியைத் திருப்பியோட்டினான். அப் பெண்மணி தன் தந்தையின் ஞாபகமாகவே இருந்ததால் எதையும் கவனிக்கவில்லை. ஆனால் அது நகரமண்டபத்தின் சமீபத்திலே வர, அவள் எதிர்பார்த்தவண்ணம் திரும்பாமல், நேரே செல்லவே, சற்று ஆச்சரியப்பட்டு,



"ஏண்டா! வீராசாமி! எதற்கு இவ்வழியாய்ப்போகவேண்டும்? இப்பக்கம் ஒரே இருட்டாயிருக்கிறதே?" என்று கேட்க, வீராசாமி, "அம்மா! அப்பக்கம் ரோடில் கப்பி போடுகிறார்கள்" என்று விடையளித்தான்.

ஆனால், அவன் சொல்லியது, புளுகென்பதை உடனே அப் பெண்மணி கண்டுகொண்டாள். ஏனென்றால், அவள் செல்ல எண்ணிய பக்கத்திலிருந்து அச்சமயம், அநேக வண்டிகள், வந்துகொண்டிருந்தன. அவற்றைக்கண்டதும், அவளுடைய மனதில், ஒருவித ஸந்தேகம் தோன்ற, "ஓஹோ! மோசம் போய்விட்டேன். இதில் ஏதோ சூதிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை! இன்னும் என் தந்தை தவறிவிழுந்து மண்டை உடைந்திருந்தால், அவரை ஆஸ்பத்திரிக்கு ஏன் கொண்டுபோகவேண்டும்? எங்கள் வீட்டிற்கு ஏன் ஒரு டாக்டரை அழைத்துக்கொண்டு வரக்கூடாது?" என்று அவள் சிந்தித்துக்கொண்டேயிருக்கையில், வண்டி ஒரு பெண் பாடசாலையின் சமீபம் வந்துவிட்டது. அதற்குள் அவளுடைய மனதில் தோன்றிய சந்தேகம் ஸ்திரப்பட்டு, அவள், உள்ளம் பதற, சொல்லொணாத பீதியுடன், வீராசாமியைப்பார்த்து ஏதோகேட்குந்தறுவாயிலிருந்தாள். அச்சமயம், வண்டியில் மாட்டப்பட்டிருந்த விளக்குத் திடீரென்று அணையவே, பயத்தின் மிகுதியால், "ஐயோ!" என்று வீறிட்டலற வாயைத் திறந்தாள். ஆனால், அதிலிருந்து அச்சப்தம் வெளிவருமுன், வண்டிக்காரன் போலக் காணப்பட்ட அம்மற்றொருவன், அவள் மீது புலிபோற் பாய்ந்து, அவள் சற்றும் கூச்சலிட வகையின்றி, அவளுடைய வாயில் ஒரு கைக்குட்டையை வைத்தழுத்தவே, மறுவினாடி, தன் சுயநினைவையிழந்தாள்!

---

## அத்தியாயம் 3.

மறுபடியும் அப்பெண்மணி தன் சுய நினைவையடைந்தபொழுது, தான் நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்த

ஒரு பெரிய அறையில், ஒரு கட்டிலின்மேல் கிடப்பதைக் கண்டதும், அவளைச் சூழ்ந்துகொண்ட பயத்தை நம் நேயர்களே யூகித்துக்கொள்ளவேண்டும்! கைகால்கள் நடுங்கச் சரீரமுழுமையும் வியர்வை குப்பென்று வெளிக் கிளம்பி ஆறாய்க் கொட்ட, திடுக்கிட்டவளாய் எழுந்துட்கார்ந்துகொண்டு, பதறிய மனதுடன், தன்னைத்தானே, நன்றாய்க் கவனித்துக்கொண்டதில், தான் அணிந்துகொண்டிருந்த நகைகளெல்லாம் சரியாயிருந்ததுமன்றி, தான் இன்னும் தன் கற்பை யிழக்கவில்லையெனக்கண்டு, ஒருதரம் பெருமூச்செறிந்தாள். பிறகு ஒரே தாவலாய்த் தாவி, தரையில் குதித்து, பைத்தியம் பிடித்தவள்போல் அவ்வறையின் கதவைநோக்கி ஓடினாள். அது வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்தது! இன்னும், அவ்வறைக்கு, வேறு கதவுகளாவது ஜன்னல்களாவது காணப்படவில்லை. எனவே, இனித்தான் தப்பவழியில்லையென்பதைக்கண்டதும், தீயில் விழுந்த புழுவைப்போல், துடித்தாள். தவிர, அவ்விதம் தன்னை அபகரித்துக்கொண்டு வந்தவர்கள், அப்படிச் செய்ததற்குக் காரணம், தன் மேலிருந்த நகைகளை யுத்தேசித்தல்ல வென்பதையும், தன் கற்பை யழிக்கும் பொருட்டே யென்பதையும் சந்தேகமற அறிந்துகொண்டாள். ஆனால், தன் கற்பையிழப்பதைக் காட்டிலும், தற்கொலை செய்துகொள்வதே மேலெனத்தீர்மானித்து, அதற்குச் சாதகமான ஆயுதம் ஏதேனுமிருக்குமென்று, அவள் அவ்வறை முழுமையும் தேடியும் ஒன்றும் அகப்படவில்லை! இதற்குள், கைகால்கள் சோர்வுற்று, நிற்கவும் முடியாமல், சுழலும் சிரத்தை இரு கரங்களாலும் பற்றிக்கொண்டு, வேரறுபட்டமரம்போல் தொப்பென்று தரையில் விழுந்தாள்!

ஆனால், எந்தநிமிஷம் தனக்கு ஆபத்து நேரிடக்கூடுமென்பதை அவள் சற்றும் அறியாதவளாகையால், தானவ்விதம், தன் மனோதைர்யத்தைக் கைவிடுவது பிசகென நினைத்தும், எது வந்தபோதிலும் தன்னால் முடிந்தவரையில் தன் கற்பைக் காப்பாற்றிக்கொள்ளத் தீர்மானித்தும், சிரமத்துடன், தன் மனதையும் பயத்தையும் சமாதானப்



படுத்திக்கொண்டு, எழுந்து, கூண்டில் அடைக்கப்பட்ட பெண்புலிபோல், கதவையுற்று நோக்கியவண்ணம், நின்றுகொண்டிருந்தாள்.

இவ்விதம் சுமார் ஐந்துநிமிஷநேரம் கழிந்தது! அதன் முடிவில் அவ்வறையை நோக்கி யாரோ வரும் சப்தம் அவளுடைய செவிகளில் விழவே, அவளுடைய தைர்யமும், தீர்மானமும் பறந்தோடிவிட்டன! கைகால்கள் மறுபடியும் நடுங்க, கிலிபிடித்து, ஓடி ஒருமூலையில் பதுங்கிக்கொண்டாள். அதேசமயம், கதவு திறக்கப்பட, சுமார் முப்பத்தேழு வயதுள்ள ஒருவர், உள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்ததும், அவரும், பிராமண ஜாதியைச்சேர்ந்தவரென்பதை அறிந்து கொண்டாள். ஆனால், அவருடைய நடையின் தடுமாற்றத்தையும், இன்னும் அவருடைய கண்களில் காணப்பட்ட மயங்கிய பார்வையையும் நோக்க, அவர் அதுவரையில் அப்பேர்ப்பட்ட கொடுங்கார்யத்தைச் செய்தவரல்லவெனத் தோன்றியது. உள்ளே நுழைந்தவர், ஒருதரம் அறையின் நாலாபக்கங்களையும் கவனித்தார். பிறகு மறுபடியும் கதவை நோக்கிச்சென்று, அதை உட்பக்கம் பூட்டிக்கொண்டார். அது முடிந்ததும், திரும்பி, ஒரு மூலையில் நடுநடுங்கி நின்றுகொண்டிருந்த, பெண்மணியை உற்று நோக்கினார். பயத்தினால் வெளுத்த அவளுடைய முகத்தையும் உதடுகள் பரிதாபப் படத்தக்கவிதம் துடிப்பதையும் கண்டு, அக்காக்ஷியைக் காண சகிக்காதவர்போல, தம்முகத்தைத் திருப்பிக்கொண்டார். வரவர, அவருடைய கைகால்களும் நடுங்க ஆரம்பித்தன. நிற்கவும் சக்தியற்றவர்போல், சுவரின்மேல் சாய்ந்துகொண்டார் அவருடைய குழப்பத்தையும், கலவரத்தையும் கண்டு, அம் மங்கை, தான் எதிர்பார்த்ததுபோல், ஈவு இரக்கமற்ற, ஒரு கொடும் பாவியிடம் சிக்கிக்கொள்ளவில்லையென நினைத்து, சற்றுத் தைரியமடைந்தாள். ஆகவே, மனதை ஒருவாறு, தேற்றிக்கொண்டு, மரியாதையுடன்,

“ஐயா! உம்முடைய முகத்திலிருந்தே, நீர், நற்குணசீலராகிய ஒரு பெரிய மனிதரென்பதையும், இன்னும், நன்றாய்ப் படித்தவரென்பதையும் கண்டுகொண்டேன்,

பயத்தின் மிகுதியால், சற்றும் திமிரச்சக்தியற்று, சரீரம் துவண்டு, அவருடைய முகத்தைப்பார்க்கவும் நடுங்கி, தன் நேத்திரங்களை இறுக மூடிக்கொண்டு,

“ஐயா! இனி நான் தப்பவழியில்லை. வாஸ்தவமே! என்னைச்சேர்ந்தவர்களில் ஒருவர், உம்மைச்சேர்ந்த பெண்களில் ஒருவருடைய கற்பை யழித்திருக்கலாம். ஆனால், அதற்காக, நீர் என்னைக்கெடுப்பது சுத்த மூடத்தனம். ஐயா! நீர் என்னைக் கெடுப்பதின் பலனாய், அப்பெண் அடையக்கூடிய சாதகம் சிறிதுமுண்டோ? ஆனால், பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற அவா உம் மனதில் தோன்றக்கூடியது எதிர்பார்க்கத்தக்கதே! அப்படியிருக்கும் பக்ஷத்தில் அப்பெண்ணைக் கெடுத்த, என்னைச்சேர்ந்த அப்பாவியின்மீது; நீர் உம்முடைய வஞ்சத்தைத் தீர்ப்பது நியாயமேயொழிய, ஒரு பாவத்தையுமறியாத என்னை நீர் கெடுப்பது பெரிய அக்கிரமம்! ஐயா! மறுபடியும் மன்றாடுகிறேன். வீணாய் இப்பாபத்தைச் செய்து, நரகத்தில் விழாதேயும்...” என்று அவள் மேலே பேசுமுன், அம்மனிதர்,

“சீ! சீ! வாயைமூடு! உன் பிரசங்கத்தை நான் கேட்கத்தயாராயில்லை! ஹா! என் கண்மணி! உன்னை மோசம் செய்து, உன் கற்பையழித்து, அக்காரணத்தால், நீ தற்கொலை செய்துகொள்ளும்படி செய்த, அச்சண்டாளன் பெண்ணை இதோ கெடுத்துவிடுகிறேன். அப்பாவியையும் இலேசில்விடேன்!” என்று, ஆவேசங்கொண்டவர்போலப் பயங்கரமாய்ச்சபதம் செய்துகொண்டு, மறுபடியும் அவள் மீது பாய்ந்து, அவளுடைய மேல் துணியைப் பலாத்காரமாய் பிடித்து இழுத்தவர், திடுக்கிட்டார்! அதற்குக் காரணம் அதேசமயம், அவ்வறையைநோக்கி யாரோவேகமாய் ஓடிவரும் சப்தம் கேட்டது! பிறகு கொஞ்சநேரம், ஒரே நிசப்தமாயிருந்தது. மறுவினாடி,

“டேய்! உடனே கதவைத்திறந்துவிடு!” என்று உரத்த குரலில் கூச்சலிடும் சப்தத்தைப் பின்தொடர்ந்தே, ஒரு பெரும் தடியினால், அக்கதவு பலமாய்த் தாக்கப்பட்டு ‘டார் டார்’ என்ற சப்தமுண்டாயிற்று. ஒரு நிமிஷ நேரத்திற்குள், அக்கதவு தூள் தூளாய்போக, ஒரு



வாலிபன் உள்ளே பாய்ந்தோடி வந்தான். அவன் நம் சபேசனைத்தவிர வேறல்லன்.

தான் சற்றும் எதிர்பார்க்காதவிதம், இப்படி ஒரு அந்நியன் அங்குத் தோன்றியதைக் கண்ட, அம்மற்றொருவர், அப்படியே பிரமித்து, தம்மை எதிர்த்து ஓடிவரும் வாலிபனை உற்று நோக்கினார். ஆனால், அவரப்படி நின்றது மிகவும் சுவல்பநேரமேயிருக்கும். அதன் முடிவில் இருவருக்கும் பயங்கரமான யுத்தம் நடந்தது. சபேசன், எவ்வளவோ சாமர்த்தியத்துடன், அவர் தப்பமுடியாவண்ணம், அடக்க முயன்றபோதிலும், ஒன்றும் பிரயோஜனமில்லாமற்போய்விட்டது. அவர், கடைசியில் தம்முழுபலத்தையும் பிரயோகித்து, சபேசனை வேகத்துடன், தூரத்தள்ளிவிட்டு ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து வெளியே ஓடி மறைந்தனர்!

அதே சமயம், அதுவரையில் அங்கு நடந்தவிஷயம், சொப்பனமோவெனச் சந்தேகிப்பவள்போலக் காணப்பட்ட அப்பெண்மணி மூர்ச்சித்துத் தரையில் விழவே, சபேசன், அவளைக் கெடுக்க முயன்ற அப்பாதகனைப் பின்தொடர்வதா, அல்லது, தரையில் கிடக்கும் அப் பெண்மணியைக் கவனிப்பதா என்பது விளங்காமையால் கொஞ்சநேரம் தயங்கியவண்ணம் நின்றான். பிறகு, “இப்பொழுது அவனைப்பிடிக்க முயல்வது அசட்டுத்தனம்.” என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, பெண்மணியை அணுகி, அவளுக்கு, மறுபடியும் பிரக்ஞைவர, தனக்குத் தெரிந்த சிகிச்சைகளைச் செய்யலுற்றான். அம்மங்கை, கால்மணி நேரத்திற்கெல்லாம், ஒருதரம் பெருமூச்செறிந்தவண்ணம், தன் கண்களைத் திறந்தாள். தன் பக்கத்தில், சபேசன் மண்டிபோட்டுட்கார்ந்துகொண்டு, அவனுடைய மேல் சவுக்கத்தினால் தனக்கு விசிறிக்கொண்டிருப்பதைக் கண்டவள், அவனைப் பார்க்க, வெட்கி, தன் இருகரங்களாலும், தன் முகத்தை மறைத்துக்கொண்டு, விசித்து விசித்தழலானாள். சபேசன், அவள் மனதிலிருப்பதைக் கண்டறிந்தவன்போல்,

“அம்மா” நீ சற்றும் கவலைப்படவேண்டாம்! நான் உன்னை இக்கோலத்தில் கண்டதாய் ஊரில் பேச்சுக்கிடம்

எனவே, நீர் இப்பேர்ப்பட்ட கார்யத்தைச் செய்யத் துணிந்தது, மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. எல்லாம்போக, இக்கார்யத்தைச்செய்ய உம்முடைய மனமே இடந்தரவில்லையென்பதை நீரே மறுக்கமுடியாது!" என்றாள்

இதைக்கேட்டதும், அவர், மறுபடியும் அப் பெண்மணியை ஒருதரம் ஏற இறங்க நோக்கினார். பிறகு,

"வாஸ்தவமே! இதுவரையில் நான் அன்னிய ஸ்திரீகளின் முகத்தையுற்று நோக்கவும் தைர்யங்கொண்டவனல்லவென்பதை என்னைப்படைத்த ஈசனே யறிவார்! ஆனாலும், தற்சமயம், நான் உன் கற்பையழிக்கத் தீர்மானித்ததற்குப் பல காரணங்களுண்டு. இன்னும், நீ எவ்வளவு சச்சரவும் கூச்சலுமிட்டபோதிலும், நீ யிங்கிருப்பதைப் பிறர் அறிய வழியில்லையாகையால், நீ என்னுடன் வாக்குவாதம் செய்வதிலும், எதிர்த்து யுத்தம் செய்வதிலும், எள்ளளவும் பிரயோஜனமில்லை!" என்றார்.

அவருடைய குரலின் தீர்மானத்தைக்கண்ட அப் பெண்மணி அவரைப் பிரார்த்திப்பவள்போல் தன் கரங்களைக் கூப்பி, கெஞ்சிய குரலில்,

"ஐயா! நீர் பேசுவதின் அர்த்தம் எனக்குச் சற்றும் விளங்கவில்லை. வேண்டாம்! வேண்டாம்! அனியாயமாய் ஒரு பெண்ணைக் கெடுக்காதேயும். வாஸ்தவமே! நான் சச்சரவு செய்வதில் பிரயோஜனமில்லையென்பதையும், நீர் இக்கார்யத்தைச் செய்துவிடத் தீர்மானிக்கும் பக்ஷத்தில் அதை எளிதில் செய்ய முடியுமென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நீர் செய்யநினைக்கும் கார்யம் எப்பேர்ப்பட்டதென்பதைத் தயவுசெய்து முதலில் யோசியும்! ஐயா! நீர் என்னைக் கெடுக்கப் பல காரணங்களுண்டென்று சொல்லுகிறீர். உலகத்தில் எப்பேர்ப்பட்ட கார்யத்தையும் செய்யக் காரணமிருக்கலாம். ஆனால், பேதைப் பெண்களின் கற்பையழிக்கக் காரணம் இருக்கவே முடியாது. தவிர, களங்கமற்ற ஒரு பெண்ணை, கேவலம் திருடனைப்போல் அபஹரித்து வந்து, இவ்விதம் கெடுப்பது உம்மைப்போன்ற படிப்பாளிகளுக்குச் சிறிதும் அழகல்ல! வேண்டாம்! என்னைக் காப்பாற்றும்!" என்று கதறியவண்ணம்



ஓடி அவருடைய பாதங்களில் விழுந்து, தேகங்குலுங்க, அழ ஆரம்பித்தாள்.

அவருடைய மனம் இளகியதுபோல் காணப்பட்டது! கொஞ்சநேரம் மேலே என்ன செய்வதென்று தோன்றாதவர்போலத் தயங்கியவாறு தம் காலடியில் பரிதாப நிலைமையில் கிடக்கும் பெண்ணை உற்றுநோக்கியவண்ணம் சிந்தனையிலாழ்ந்திருந்தார். இதற்குள் அப் பெண்மணி எழுந்து அவர் முன் நின்றுகொண்டு, தன் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கொட்டிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே,

"ஐயா! சற்றும் தாமதம் செய்யாமல் என்னை வெளியில் போகவிடும். அந்தோ! உலகில் இப்பேர்ப்பட்ட அக்கிரமங்களும் நடக்கக்கூடுமென்பதை நான் சற்றுமறியவில்லையே! ஐயா! உமக்குக் கோடி புண்ணியமுண்டு. தயவுசெய்து கதவைத் திறந்துவிடும். நீரும், பெண்களைப் பெற்றவராகவே யிருப்பீரென்று நம்புகிறேன்!" என்றாள்.

"பெண்கள்" என்ற வார்த்தையைக் கேட்டதும் அம்மனிதருடைய முகம் சிவந்து, பயங்கரமாய் மாறியது! அதில் அதுவரையில் காணப்பட்ட, பயமும் தடுமாற்றமும் பறந்து, வியக்கத்தக்க, ஒரு கொடும்பார்வையும், தீர்மானமும் தோன்றின. தன் கோப வெறியை அடக்கமாட்டாதவராய்த் தம் பற்களை நற நறவென்று கடித்துக்கொண்டே,

"அடியே! தற்சமயம், நான் உன் கற்பையழிக்கத் தீர்மானித்ததற்குக் காரணம், நானும் பெண்ணையடைந்தவனென்பதே! ஹா! உன்னை விடேன்!" என்று ஆத்திரத்துடன், புலிபோல் அப் பெண்மணியின்மீது பாய்ந்து, அவளுடைய இருகரங்களையும் பற்றிக்கொள்ள, அவள், "ஐயோ! சண்டாளா! வேண்டாம்! வேண்டாம்!" என்று வீறிட்டலறி, தன்சரீரத்தை முறுக்கிக்கொண்டாள். ஆனால், அவர் சற்றும் தயங்காமல், அப்படியே அவளைப் பந்துபோல் தூக்கி, சமீபத்திலிருந்த மஞ்சத்தின்மேல் கிடத்தி, கோபத்தினால் ஜ்வலிக்கும் தம் கண்களுடைய பார்வையை அவள்மேல் நாட்டினார். நிற்க, பெண்மணி

# ORDER FORM.

Date.................... Place...............................

To "BALA VIDYA" Office,
**Publishers—SRI VIDYA PRESS,**
**No. 5, East Iyen Street, KUMBAKONAM.**

Dear Sirs,

Please enlist me as a subscriber for the "BALA VIDYA" Monthly Journal for 1 year from 193 to 193. The due subscription of Rs. 1—8—0 is sent through Money Order (* is to be recovered by V. P. P) which kindly acknowledge.

Yours faithfully,

Signature.

---

*Please strike off where necessary.

Complete address of the subscriber is to be given at the back. P. T. O.

## "பாலவித்யா" ஆபீஸ்.

பப்ளிஷர்ஸ்:- ஸ்ரீ வித்யா பிரஸ்,
5. கீழய்யன் தெரு,
கும்பகோணம்.

..............................193

ஐயா!

தங்கள் ஆபீஸிலிருந்து பிரதி இங்கிலீஷ் மாதமும் பிரசுரமாகும் "பாலவித்யா" என்னும் உயர்தர நாவல் மாதப்பத்திரிகைக்கு என்னை ஒரு சந்தாதாரராக சேர்த்துக் கொண்டு பிரதி மாதமும் பத்திரிகையை அனுப்பிவரக் கேட்டுக்கொள்கிறேன்.

N.B. சந்தா தொகையை மணியார்டர் மூலமாக அனுப்பியிருக்கிறோம் (வி. பி. மூலம் அனுப்புங்கள்).

இப்படிக்கு,

கையெழுத்து.

---

சந்தாதாரர்களின் முழுவிலாஸமும் பின் பக்கத்தில் விபரமாக எழுதி அனுப்பவும். P. T. O.

The subscribers are requested to note that, by sending their subscriptions by M.O. in advance, they can save 2 or 3 As in the shape of postage that will accrue unnecessarily by the V.P. system.

**Subscriber's Full Address.**

Name.............................................................................

.....................................................................................

.....................................................................................

அறிவிப்பு.

வி. பி.மூலம் அனுப்பினால் தபால்செலவு ஜாஸ்தியாகும். ஆகையால் சந்தாதாரர்கள் சந்தா தொகையை மணியார்டர் மூலயம் அனுப்பிவிடுவது நலம்.

**சந்தாதாரரின் முழு விலாஸம்.**

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

கொடுப்பேன் என்ற கவலையை அடியுடன் விட்டுவிடு.'' என்று உறுதிமொழி கூறவே, அப்பெண்மணி,

"ஐயா! தற்சமயம் தெய்வம்போல்வந்து நீர் என்னைக் காப்பாற்றியதற்கு......'' என்று அவள் மேலே பேசுமுன் சபேசன்,

"அம்மா! தயவுசெய்து இப்பொழுது அதைப்பற்றிப் பேசவேண்டாம். சரி! நாம் இனி ஒரு நிமிஷநேரமும் இங்கிருப்பது அபாயத்திற்கிடம். இப்பொழுது நீ போக வேண்டியது எங்கென்பதைச் சொல்!'' என்றுவினவினான்.

"நாங்களிருப்பது பட்டாபிராமன் தெரு......!'' என்று விடையளித்துவிட்டு அப் பெண்மணி, மேலே ஏதோ சொல்ல நினைப்பவள்போலும், ஆனால் அதை வெளியிடத்தயங்குபவள் போலும் காணப்படவே, சபேசன் பிரியத்துடன்,

"அம்மா'' உன் மனதிலிருப்பதை நான் நன்கறிவேன். உனக்கு, இன்னும் என்மேல் சந்தேகமிருக்கும் பக்ஷத்தில், இதோ இவ்விஷயத்தை நான் வெளியிடுவதில்லையென்று, என் பெற்றோர்கள்மேல்...... என்று தொடர்ந்து பேசுமுன்

இதைக்கேட்ட, அப் பெண்மணி, அவன் மேலே பேசாவண்ணம் தடுத்து, தன் நன்றியறிவை, தன் பார்வையினால் வெளிக்காட்டி,

"ஐயா! நீங்கள் சத்தியம் செய்யவேண்டியது அவசியமில்லை. நான் உங்கள்மேல் சந்தேகப்பட்டதற்குத் தயவுசெய்து மன்னிக்க வேண்டுகின்றேன்!'' என்று வேண்டிக்கொண்டாள்.

"நீ சந்தேகித்தது நியாயமே! அதனாலொன்றும் பாதகமில்லை. நான் இதில்சற்றும் விஷமம்செய்ய ஆசைப்படவில்லையென்பதைக் காண்பிக்க, நீ யாரென்பதையும், உன் பெயரென்ன வென்பதையுங் கூடக் கேட்டறிந்து கொள்ளப் போவதில்லை. சரி! வா! போவோம்!'' என்று அவளையழைத்துக்கொண்டு அவ் வீட்டை விட்டு வெளியே சென்றான்.

# வெள்ளி நாணயத்தால் விளைந்த விபரீதம்.

## (ஓர் இனிய கதை)

(கோவை—திரு சி. கு. நாராயணசாமி முதலியார் எழுதியது.)

மார்கழிமாதம் நல்ல குளிர்காலம். பனியின் மிகுதியால் தரை முழுதுங் குளிர்ந்து சில்லென்று தேகத்தை மிகவும் நடுங்கும்படி செய்தது. குளிர் என்ற பெயரைச் சொன்னவுடனே பயந்து வீட்டுக்குள் நுழைந்துகொள்ளும் பேடிகளைக் குளிர் உடன் தொடர்ந்து பெரிதும் வருத்துவதும், அதற்கு அஞ்சாமல் எதிர்த்து நிற்பவர்களைப் பலமாக வாதிக்காதிருப்பதும் அதனுடைய தொழிலாயிருந்தது. எதிர்ப்பவர்களில் வேலப்பனையும் ஒருவனாகக் கொள்ளலாம். திருஷ்டாந்தமும் காட்டக்கூடும். தனியாகக் காட்டுவது உசிதமன்று.

வேலப்பனுக்கு இப்பொழுது வயது 60. விவசாயத்தில் ஐம்பது வருஷப் பழக்கமும் அநுபவமும் உண்டு. போதுமான பூஸ்திதிகளையும் உடையவனாயிருந்தான். இவனது வரவுக்கேற்றபடி குடும்பமும் பெருக்கமாயிருந்தது.

“உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை, கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு”

என்ற செய்யுளின் கருத்துக்கு இவன் சாக்ஷியாக இருந்தனன்.

இவனுக்குப் புதல்வர் பதின்மரும், புதல்விகள் அறுவரும், மருமகன், மருமகள், பேரன், பேத்தி, கொள்பேரன் முதலியவர்களுமாக ஐம்பதின்மரும்; பந்துக்களும், உறவினரும், உறவினருக்குறவினருமாக ஐம்பதின்மரும் ஆக மொத்தம் நூற்றுப்பதினறுவர் வீடு நிறைய இருந்தனர். இவர்கள் அனைவரையும் வேலப்பன் ஒரு வீட்டில் வைத்துக் குறைவென்பதின்றி நன்றாக ஆதரித்துச் சுபகாரியங்கள், பண்டிகைகள், விரதாதிகள், முதலிய விசேடங்களைச் சிறப்பாகச்செய்தும், ‘சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்’ என்ற முதுமொழியைப் பின்பற்றியும் இருந்துவந்தனன்.

வேலப்பனுக்குள்ள பூமியின் அளவை நாமறியோம். சிறிய குடும்பமே சிறிது காலத்திற்குள் பெருகிப் பெருங்குடும்பம் ஆம்போது பெருங்குடும்பம் பெருகிச் சிறப்பதில் அதிசயமில்லை. பல்வேறு விஷயங்களைத் தன்னுட் கொண்டு விரிந்த பெருங்காவியம், ஒவ்வோர் காண்டம், அல்லது அத்தியாயங்களில் அடங்கிக் கிடப்பதுபோல, பெரியதொரு குடும்பம் வேலப்பனது அதிகாரத்தின் கீழடங்கி அவனது நிர்வாகத் திறமையை விளக்கிக்கொண்டிருந்தது.

ஒருநாள் விடியற்காலம் வேலப்பன் குளிர் தாங்கமுடியாமல், படுக்கையை விட்டெழுந்து, தெருவாசலுக்கு வந்து, குப்பை கூளங்களைச் சேகரித்து நெருப்பு மூட்டித் தீக்காய்ந்துகொண்டிருந்தனன். இஃதறிந்த சிறு பையன்களும், விரைந்தெழுந்து வெளியில் வந்து நெருப்பைச் சூழ்ந்துட்கார்ந்துகொண்டு தீக்காய்ந்தனர். இடையிடையே வேலப்பன், 'நெருப்பு, ஜாக்ரதை,' என்று அதட்டி எச்சரித்துக்கொண்டே இருந்தனன். கிழவன் வார்த்தையைக் கிண்ணாரக்காரன் கேளாததுபோல், வேலப்பனது எச்சரிக்கையைப் பையன்கள் சட்டைசெய்யாமல் நெருப்புடன் விளையாடிக்கொண்டிருந்தனர். ஒருபையனை ஒரு பையன் தள்ள, அப்பையனை மற்றோர் பையன் கிள்ள, வேறோர் பையன் அவன்மீது விழ, இன்னொருபையன் அவனை இடிக்க, அவனை இவன் அடிக்க, ஒருவன் வேண்டாமெனத்தடுக்க, தடுத்தவனை எதிர்த்தடிக்க, இவ்வாறு விஷமச்செயல்களைச் செய்துகொண்டிருந்தனர்.

வேறு சில பையன்களில் ஒருவன், எரிகின்ற தீக்கோலை எடுத்து, தீயில்லாத பாகத்தை வாயில் வைத்துச் சுருட்டுப்பிடித்தனன். இதுகண்ட வேறோர் சிறுமி தனது வாயைத் திறந்து, ஹா! என ஊதி அதில் வரும் நீராவியைத் தன் தோழிக்குக்காட்டி, நீயும் அந்தப்படியே செய்யென்று தூண்ட, அவளும் அப்படியே செய்துகாட்டினள். இவ்விதம் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்கையில், சிறிது சிறிதாக இருட்டு விலகி வெளிச்சந் தோன்றியது. மலையின் சமீபத்திலுள்ள ஆகாயத்தில் புகைசூழ்ந்த மேகம், விரிவாகப்பரவிச் சுற்றிலும் பனிச்சுவர்போல் காணப்பட்டது. இச்சூக்ஷ்ம ஜலகண சமுதாய பாரமனைத்தும், சுமக்கப்பட முடியாமலிருக்கையில், காற்று அதிற்சென்று கலந்து அதனைப் பனித்துளியாகச் செடி கொடிகளின்மீது விழச்செய்தது. அப் பனித்துளியின் பாரத்தைச் சுமக்கமாட்டாத அவைகள், எல்லாச்சுமையையும் பொறுமையுடன் சுமக்கின்ற பூமிதேவியின்மீது மிருதுவாகச் சொரிந்தன. அங்ஙனம் சொரிந்த பனிவெள்ளம் சிற்றாறாகப் பெருகி அலையெறிந்து வீசிக்கொண்டிருந்தது.

இத்தகைய சமயத்தில் வேலப்பன், அச் சிறுவர்களைப்பார்த்து "ஓ பிள்ளைகளே!" என்று அழைத்தனன். அவ்வழைப்பை விளையாட்டின்மீது கண்ணாயிருந்த தனது பேத்திப் பெண்ணைத்தவிர, மற்றவரெல்லாம் செவிகளைச் சாய்த்து, பாட்டனாரைப் பார்த்தவண்ணமாகவே கேட்டிருந்தனர். அவனது நரைத்த தலையும், மலர்ந்த முகமும், கருணை நிறைந்த கண்களும், அவ்வெளிச்சத்தில் நன்றாகத்தெரிந்தன. அப்பிள்ளைகளில் பெரியவனான கோபாலன், பாட்டனான வேலப்பனிடத்து அன்பாயிருந்தனன். மிக்க பலஹீனன். தன் தம்பியைப்போலின்றி மிதமாய்ப்பேசும் சுபாவத்தினன். பாட்டனார் கூறும்



நீதிகளைக் கேட்பதில் அவனுக்கு விருப்பமதிகம். ஆனதனால், பாட்டனார் வாயினின்றும் வெளிவரும் சொற்களைக் கூர்ந்து கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தனன். அன்று உதயத்தில் பாட்டனார் கூறிய கதையை மறவாமல் ஞாபகத்தில் வைத்திருந்து பெரியவனாய் எழுதப் படிக்கத் தெரிந்தபின் ஓர் புத்தகத்தில் எழுதி வைத்துக்கொண்டான். அதுவே இங்குப் பிரஸ்தாபிக்கத் தொடங்கப்படுவது. அக்கதை வருமாறு :—

என் பெற்றோர்கள் மிகவும் ஏழைகள், ஐந்துவயதுள்ள என்னையன்றி எனக்கு முன்னும் பின்னும் பிறந்த ஆறுகுழந்தைகளையும் அவர்கள் வளர்த்துவரவேண்டியதாயிருந்தது. ஒருநாள் கழிப்பது அவர்களுக்கு ஒரு யுகம் கழிவதுபோலிருந்தது. பணவரவில்லை. எனக்கு எட்டுவயது எட்டியதும் என்னைச் சோமசுந்தரம் என்ற ஓர் தனிகனிடத்து வேலைக்கு அமர்த்தினர். அத்தனிகன், எனக்கு அன்னமும், ஆடையும் அளிப்பதற்காக அவனது பூமியைப்பற்றிய வேலைகளை என்னைக்கொண்டு செய்வித்து வந்தான். என்னால் என் பெற்றோர்களுக்குத் தம்பிடியேனும் லாபமில்லை எனினும் என்னைப்பற்றிய கவலை குறைந்ததே அவர்களுக்குப் பேருபகாரமாயிருந்தது.

சோமசுந்தரம் வேலையாட்களிடம் தந்திரமாக வேலைவாங்குவதில் மிகு சமர்த்தன் எனப் பெயர் பெற்றிருந்தான். தங்களுக்குப் பெரியதொருகஷ்டம் விளைவிப்பானோ! கடினமான வேலைகளுக்குக் கட்டளையிடுவானோ! என்றஞ்சியே ஒருவரும் அவனிடத்தில் வேலைக்கு அமர்வதில்லை, அமர்ந்தாலோ, அவனிடும் கடினவேலைகளை அஞ்சாமல்செய்தே தீரவேண்டும். நாடோறும் அதிகாலையில் எழுந்து தோட்டத்திற்குச் சென்று பால் கறந்தபின், பசுக்களை வீட்டுக்கு ஓட்டிவருவது என்னுடைய வேலைகளில் ஒன்று. தேக நிலை எவ்வாறிருப்பினும், ஏற்பட்ட வேலையைச் சரிவரச் செய்தே தீரவேண்டும். பழையது சாப்பிட்டபின் தோட்டத்திற்குச் சென்று மாட்டுக்கொட்டிலைச் சுத்தப்படுத்துவதும், பருத்திக்கொட்டையையாட்டிப் பானையில் நிறைப்பதும், பயிருக்குக் களையெடுப்பதும், கன்றுகாலிகளை மேய்ப்பதும் என் மற்றைய வேலைகள்.

என்னுடைய வேலைகளை நான் சிரத்தையாகவே செய்துவந்தேன். பசுக்கள் என்னைக் கண்டால் அம்மா! என்று கூப்பிடும். தூரத்தில் வரும்பொழுதே என்னை அடையாளங் கண்டுகொண்டு பக்கத்தில் வரும்படி கொம்பசைக்கும். சூரியோதய சமயத்தில் பறவையினங்களின் இனிய தொனி, என் செவிகளுக்கு இன்பத்தையூட்டும். வேலியோரங்களில் படர்ந்திருக்கும் பூக்கொடிகளின் மலர்கள் நல்ல மணத்தைத் தரும். இவ்வானந்தங்களை அடைந்த எனக்குப் பாடசாலைக்குப் போகவேண்டுமென்றாவது, கற்கவேண்டுமென்றாவது

எண்ணமே உண்டாகவில்லை! 'கல்வி கற்றால் நிறையப் பணம் சம்பாதிக்கலாம்' என்ற கருத்துங்கூட எனக்கு உதிக்கவில்லை. உதித்திருப்பின், அது நிறைவேறாமலே போயிருக்கும்.

ஏதோ! ஒரு பண்டிகைநாளில், எனக்குக் கிடைத்த ஒன்றிரண்டு காசுகளைத் தவிர என்கையினால் நான் ஒருபோதும் ரூபாயைத் தொட்டறியேன். அந்த ஒன்றிரண்டு காசுகளும் கிடைத்தபோது எனக்குண்டான ஆனந்தத்திற்கு ஓர் எல்லையே இல்லை. இத்தகைய ஆனந்தம் ஆண்டிற்கோர் நாள் எனக்குண்டாகும். பொருளை எப்பொழுதும் வைத்து அநுபவித்து ஆனந்திப்பவர்கள் உலகில் சிலரேயாவர். எல்லாருக்கும் அப்பாக்கியம் வாய்ப்பதில்லை. அத்தகைய துரதிர்ஷ்டர்களில் யானும் ஒருவன். சோமசுந்தரம்பிள்ளையிடம் கூலியாளாகச் சேர்ந்த மூன்று வருஷத்தில் செம்புக்காசைத்தவிர வெள்ளிநாணயத்தை நான் தொட்டறியேன். அகஸ்மாத்தமாக ரூபாய் ஒன்று அகப்பட, அதை நான் தொட, அதுமுதலே எனக்கு, ரூபாயின் பரிச உணர்ச்சி தெரியவந்தது. அவ்வரலாறே எனது கதைக்குரிய விஷயம். அன்பர்கள் சிரத்தையுடன் கவனிக்க வேண்டுகிறேன்.

நான் நாடோறும் கடைக்குச்சென்று வேண்டுமான சாமான்களை வாங்கிவந்து எஜமானன் வீட்டிற் சேர்ப்பது வழக்கம். அவ்வழக்கப் பிரகாரம், ஒருநாள் மாலைவேளையில் கடைத்தெருவுக்குச் சென்று வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வீட்டைநோக்கி வந்துகொண்டிருந்தேன். அப்பொழுது சூரிய அஸ்தமனமாய் ஒருநாழிகை சென்றிருந்தது அந்தகாரம் என்னும் அரக்கி தனது நிறத்தைச் சிறிது சிறிதாகப் பரப்பிக்கொண்டிருந்தனள். அவ்விருட்டில் நடந்துகொண்டிருந்த என் கண்ணுக்குப் பூமியின்மீது வட்டவடிவமாய்த் தூய வெண்மை நிறத்தில் வஸ்து ஒன்று தென்பட்டது. ஆயின் அதனை எடுக்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றாமலே. அலட்சியமாகச் சென்றேன். பேதைமனம் முன்னேறவிடாமல் அது என்ன வஸ்து என்று கையில் எடுத்துப் பரிசோதிக்கும்படி துரிதமாகத் தூண்டியது. ஆனதால் திரும்பிவந்து அவ்வஸ்துவைக் குனிந்தெடுத்துக் கையில் வைத்துக்கொண்டேன். அது ஒரு கடிதப்பொட்டணமாயிருந்தது. அதனைத் திரும்பவும் எறிந்துவிடலாமென்று நினைத்தேன். லகுவான பாரமாயிருப்பதுகண்டு எறியத்துணிந்தேனில்லை. யாரேனும் விளையாட்டுப்பிள்ளைகள் என்னைப் பரிகசிப்பதன்பொருட்டு இப் பொட்டணத்தைத் தெருவில் எறிந்திருப்பார்களோ என்று எண்ணினேன். அவ்வெண்ணத்துடன் சிறிது தூரம் சென்றேன். யாரும் என்னருகில் வரவேயில்லை. அதன் பின்னர் அப்பொட்டணத்தை ஆவலோடு திறந்தேன். அதில் வெண்மைநிறமாய், வட்டவடிவமாய், புத்தம் புதிதாய், ஆங்கில நாணயமான வெள்ளி ரூபாய்



ஒன்றிருந்தது. எனக்குண்டான ஆனந்தத்திற்கு எல்லையேயில்லை. பின்னர் ஒருவாறு தெளிந்து, அதனைக்கையில் எடுத்து ஓசையுண்டாகின்றதா வென்பதைப் பரீட்சிக்க ஒரு கல்லின்மீது நின்ற நிலையிலிருந்து போட்டேன். அது கலீரென்று ஓசையுண்டாக மறுபடியும் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தேன். பின்னரும் சந்தேகந்தோன்ற அந்த ரூபாயை என் பற்களில் வைத்துக் கடித்துப்பார்த்தேன். அது மெத்தக் கடினமாகவே இருந்தது. இங்ஙனம் பரீட்சைகளை முடித்துவிட்டு அவ்வெள்ளி ரூபா என்னைவிட்டு நழுவாதிருக்கும்பொருட்டுப் பத்திரமாக ஒரு கடிதத்தில் பொதிந்து எனது சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டேன். இதற்குள் அதிகம் இருட்டியதால் விரைவாக வீடுநோக்கி நடந்தேன். நான் வீடுசேர்வதற்குள் மும்முறை பணம் இருக்கிறதா எனப் பரீட்சித்தேன். நான் கண்டெடுத்த பணத்தைக்கல்லின்மீது போட்டுப் பரீட்சைபார்த்தபோது யாரேனும் வந்து 'என்னுடையது அப்பணம், கொண்டா' என்று கேட்கப் பின்தொடர்ந்து வருகிறார்களா வென நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொண்டே இருந்தது நான் ஒருகுற்றமும் செய்யாதிருந்தும், என் நெஞ்சில் பயமாகவே இருந்தது. ஆயின், யாரும் என்னருகில் வரவே இல்லை.

ஒருசமயம் யாரேனும் வந்து, 'ரூபாய் என்னுடையது தான், கொடு' என்று கேட்டால், நான், 'உம்முடையதன்று; அது என்னுடையதே' என்று பதில் கூறலாமென நினைத்துக்கொண்டிருந்தேன். அப்படிக் கூறுவதற்கு மனஉறுதி வரவில்லை. மனவுறுதியை எவர்கள் கைவிடினும், அவர்களது தைரியமற்ற நெஞ்சில் விசாரம் என்கின்ற மூளை தோன்றும். விரைவாகக் கடைத்தெருவுக்குச் சென்று இந்த ரூபாய் யாருடையதென்று விசாரிக்கலாமாவென்றெண்ணினேன். மறுநிமிஷம் அது எனது வேலையல்லவென்று தீர்மானித்துக்கொண்டு விரைந்து வீடுசேர்ந்தேன். வெள்ளிரூபா என் சட்டைப்பையினுள்ளேயே இருந்தது.

எனக்குத் தெருவில் ரூபாய் அகப்பட்ட செய்தியை என் எஜமானனுக்காவது, அவனது வீட்டிலுள்ளவர்களுக்காவது நான் சொல்லவேயில்லை. ஏன் சொல்லவேண்டும்? எனக்குக் கிடைத்த வெள்ளிரூபா என்னைவிட்டு மறைந்துவிடுமோ! என்ற அச்சமட்டும் எனது மானஸவீதியில் தாண்டவம் செய்துகொண்டிருந்தது. நான் பயப்படுவதற்குக் காரணங்கூட உண்டு. அது, என் எஜமானன் எங்கு என்னைச்சோதித்துச் சட்டைப்பையிலுள்ள ரூபாயைக்கண்டு 'இதேது உனக்கு,' என்று கேட்பானே என்பது. அன்றிரவு நான் என் தமக்கை, தம்பி முதலானவர்களுடன் சரியாக முகமெடுத்துப் பேசக்கூடாமல் இருந்தேன். தனியாயிருக்கவேண்டுமென்றே என் மனது

முந்திக்கொண்டிருந்தது. அன்றிரவெல்லாம் என் கண்கள் உறங்காமல் விழித்தபடியே இருந்தன. அகப்பட்ட பணத்தை எப்படி ஒளிப்பது? காப்பாற்றுவது எவ்வாறு? எந்த விதமாய்ச் செலவழிப்பது? என்று மனதுடன் சேர்ந்து ஆலோசித்துக்கொண்டே இருந்தன.

இத்தகைய சிந்தனையில் இரவெல்லாம் தூக்கமின்றி ஏக்கத்துடனிருந்து முகவாட்டத்துடனும், குழிவிழுந்த கண்களுடனும், துர்ப்பல சரீரத்துடனும், படுக்கைவிட்டெழுந்து வெளியில் வந்தேன். இயல்பாக எப்பொழுதும் உற்சாகமே மேலோங்கியுள்ள எனக்கு இப்பொழுது சோம்பலுண்டாயிற்று. ஆனால், பசிமாத்திரம் உண்டாகவில்லை. அன்னத்தின்மீது வெறுப்புண்டாயிற்று. மலர்ச்சியின்றி முகம் பயத்தால் மாறுபட்டிருந்தது. என்னுடையதல்லாத அன்னியனுடைய நாணயம் என்னிடத்திலிருப்பதே இதற்கு முகாந்தரம்போலும்.

இத்தகைய மாறுபட்ட நிலையில் நானிருக்கும்போது, 'கோபாலா'! என்று எஜமானன் விளித்த சத்தம் எனது காதிற்பட்டது. வழக்கமாய் விளிப்பதிலும் சற்று உரத்துக்கூவிய தொனி, எனது தேகத்தை நடுங்கச்செய்தது. "இன்றோடு எனது நாணயம் என்னைவிட்டு விலகிவிடுமோ" என்று ஐயமுற்றேன். எஜமானன் என்னிடம் ரூபாயைப் பற்றி விசாரித்தால் நான் யாது பதிலுரைப்பது? என்று எண்ணியபோதே என் முகம் வெளுத்து விகாரப்பட்டது. தலை கவிழ்ந்தது. "கள்வனே! நீ கண்டெடுத்த ரூபா எங்கே? அதனை எங்கொளித்தனை? அது யாருடையதென்று நீ விசாரித்து அவரிடம் அதனைச் சேர்ப்பதில் நீ என் முயற்சிசெய்யவில்லை" என்று கேட்டால், யாது பதிலுரைப்பது, என்று மயங்கினேன். இவ்விதமாக நான் ஆலோசித்துக் கொண்டிருக்கையில், எஜமானன் என்னைப்பார்த்து "கோபாலா! நீ இராமசாமியிடஞ்சென்று, இன்று வேலைக்கு வரமுடியுமா? முடியாதா? என்று கேட்டுவா" என்று கட்டளை இட்டனன்.

இவ்வுத்தரவு செவிப்பட்டதும், பெரியதொரு பாரம் என்னைவிட்டு இறங்கியது போலிருந்தது. எனக்கொரு தைரியமுண்டாயிற்று. இத்தகைய கட்டளைகளை எனக்கெத்தனையிட்டாலும் நான் சோம்பலின்றிச் சந்தோஷத்துடன் செய்து முடிப்பேன் என்று மனதுள் நினைத்துக்கொண்டு உற்சாகத்துடன் குதித்தவண்ணமாய் இராமசாமி வீடு நோக்கிச் சென்றேன்.

இங்ஙனம் செல்லும் வழியில் எனது சட்டைப் பையிலிருந்த ரூபாயை எடுத்துக் கண்ணாரப் பார்த்துக் களிப்படைந்தேன். அந்த ரூபாய்க்குக் கிடைக்கும் சாமான்களின் அளவைக் கணக்கிட்டபோது, எனக்குண்டான ஆனந்தம் அளவிற் கதிகமாயிருந்தது. ஆனால், அந்த ரூபாயை மாற்றிச் சாமான் வாங்கத் தைரியமுண்டாகவில்லை. நாணயம் அகப்பட்டதனால் அதிர்ஷ்டம் வந்ததென்றெண்ணி, ஆனந்திப்-



பதா? தெருவில் விழுந்த பொருள் யாருடையதென்று விசாரித்து அவரிடம் கொண்டு கொடாமலிருப்பதற்கு விசனிப்பதா? என்று இவ்விஷயம் பற்றி ஆராயும்போது துக்கம் அதிகரித்தது. என்னை ரூபாயுடன் பிடித்துக்கொண்டால் கள்வன் என்பார்களே! பிறர் பொருளை மறைப்பது குற்றமல்லவா? அப்படியானால் இந்நாணயம் எனக்கு வேண்டுவதில்லை. அதற்குரியவன் வந்து கேட்டால் உடனே கொடுத்து விடுகிறேன். யார் அதனை இழந்தார்களோ அது தெரியாமலிருக்கும் பொழுது அதனை யாரிடம் கொடுப்பது? என்று இவ்விதம் எண்ணமிட்டுக்கொண்டே இராமசாமியின் வீட்டைச் சமீபித்தேன்.

பிறருடைய பொருள் எனதுவசமிருக்கும்வரை, எனது மனதிற்குள் பெரியதொரு இரும்புக்குண்டைத் தொங்கவிட்டதுபோல் பாரமானது என்னை வருத்திக்கொண்டே இருக்கும் எனத் தீர்மானித்துக்கொண்டேன். கேவலம் பொருள் அவாவினால் எனக்கு நேர்ந்த துன்பத்திற்கு மிக வருந்தினேன். மெருகிழந்து தேய்வடைந்த செம்பு நாணயம் கிடைத்தபோதுண்டான சந்தோஷத்தில் பாதிகூட இப்பொழுது உண்டாகாமல் போனதற்கு அதிசயித்தேன். செம்பு நாணயத்தை விளக்கிக் கழுவிப் பகிரங்கமாக வைத்திருந்தபோது எனக்கு இத்துணை மனோவேதனையும், பயமும் உண்டாகவில்லை. ஆனால், புன்மைக் குணமுடைய சிலர் மட்டும் பொறாமை கொண்டனர். அச்செம்பு நாணயங்கள் என்னிடத்திலிருந்த அப்பொழுது நான் மகாராஜாவாக ஆய்விட்டதாக எண்ணிக் கருவங்கொண்டிருந்தேன். இப்பொழுது அந்தச் செம்பு நாணயங்களிலும் ஐம்பது மடங்கு அதிக மதிப்புள்ள வெள்ளி நாணயம் என் கைவசத்திருந்தும் எனக்கு ஆனந்தம் அதிகரிக்காமல் மனோவேதனையே அதிகரித்திருந்தது. 'அந்தோ! என் செய்வேன்? என் கைவசத்திலுள்ள வெள்ளி ரூபா என் கண்காணாமல் மாயமாய் மறைந்து என் மனோதுக்கத்தை மாற்றுதா?' என்று சொல்லிக்கொண்டே இராமசாமியின் வீட்டிற்குள் நுழைந்தேன்.

அப்பொழுது இராமசாமி வீட்டிலில்லை. எஜமானனுக்கு விவரத்தை அறிவிக்கத் திரும்பியபோது வழியில் எனது வீட்டுக்கருகிலுள்ள தோட்டத்து வேலியைச் சமீபித்தேன். அப்போது எனது கண்ணுக்குத் தோட்டத்துள் குதிரையொன்று மேய்வதாகத் தெரிந்தது. அக் குதிரை கிராமாதிகாரியின் குதிரை என்று எனக்குத் தோன்றியபோது எனது நெஞ்சம் திடுக்குற்று உடம்பெல்லாம் வெயர்வையால் நனைந்துபோயிற்று. உண்மையில் அக் குதிரை கிராமாதிகாரியுடையதாயிருந்தால், எனது திருட்டு வெளியாய்க் கேட்போர்க்கெல்லாம் நகைப்புக் கிடமாயிருக்கும். தூரத்துப் பார்வையில் அவரது குதிரையைப்போலவே எனக்குத் தெரிந்தது. இத்துணைக்கும் கார-

ணம் எனது பயமே. 'அதிகாரி வெள்ளிநாணயத்தின் விருத்தாந்தத்தைத் தெரிந்து என்னைக்கைது செய்து சிறைச்சாலையில் கொண்டடைக்கத்தான் குதிரை மீது வந்திறங்கியிருக்கின்றாரோ?' என்று எண்ணினேன். நெஞ்சம் படபடவென்றடித்துக்கொண்டது. அது சிறிது நின்றதும், எனது இடுப்பு வளைந்துவிடும்போலிருந்தது. கால்கள் துவண்டன. முகம் வெளுத்தது. குதிரை மேய்வதற்கருகிலுள்ள புதரில் மறைந்துகொள்ளலாமென அங்குச் சென்றபோது அங்கிருந்த முட்கள் என் கால்களில் சுருக்கென்று தைத்து வேதனையுண்டாக்கப் பொருத நான் அப்புதரினுள்ளே அயர்ந்து விழுந்துவிட்டேன்.

அங்கு நான் வீழ்ந்திருந்தது சிறிதுநேரந்தானிருக்கும். அது எனக்கு ஒருயுகம் போலிருந்தது. இச்சமயத்தில் கிராமாதிகாரியின் குதிரை அத்தோட்டத்தினின்று வெளியேறிவிட்டது. நான் கீழே விழுந்த அதிர்ச்சியினால் அக்குதிரை அப்புறஞ் சென்றிருக்கவேண்டுமெனக் கருதிக் குனிந்து கவனித்தேன். அது எனது கண்களுக்கு எட்டாத தூரத்தில் ஓடி மறைந்தது. அஜாக்கிரதையால் நான் தவறிவிட்டதற்கு என்னை நானே தேற்றிக்கொண்டு, 'இப்பொழுது தப்பித்துக்கொண்டோடினும், இன்னும் சிறிது நேரங்கழித்தாவது அக்குதிரை உள்ளே வாராதா? அப்பொழுது பார்த்துக்கொள்ளுகிறேன்.' என்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு அப்புதரினின்றும் மெதுவாக வெளியேவந்து ஆடையை நன்றாக உடுத்திக்கொண்டு காலடி ஓசைபடாமல் மெதுவாக நடந்து எஜமானன் வீட்டுள் நுழைந்தேன்.

சோமசுந்தரம்பிள்ளை என்னைக் கண்டதும், மிகவும் கோபித்துக் கொடுமையாக என்னை நோக்கினன். அதுகண்டஞ்சிய நான் என்னுள் 'பூமி விரிவாகப் பிளந்து என்னை விழுங்கிவிடுமானால் நன்றாயிருக்கும்' ஆ! கடவுளே! நீ துணைசெய்வாயாக' என்று வேண்டினேன். எஜமானனது குரூரப் பார்வையினால், 'அவர் என்னை நன்றாகத் தண்டித்துச் சிறைக்குக்கொண்டுபோவதென்னவோ இன்று நிசசயம், என்று எண்ணினேன். ஆனால், நான் எண்ணியபடி அவர் செய்யவில்லை. அவர், என்னை அடே முட்டாள்! ஏன் இவ்வளவு தாமதம்? என்று கூறி வாயில்வந்தபடியெல்லாம் வைதனர். நான் அவற்றிற்கு யாதும் பதிலுரையாமல் மௌனமாய் நின்று பொறுத்துக்கொண்டிருந்தேன். இங்ஙனம் நான் பொறுத்திருந்ததற்குக் காரணம், எஜமானன் வெள்ளிநாணயத்தைப்பற்றியும், சிறைக்கூடத்தைக் குறித்தும் பிரஸ்தாபிக்காமல் இருந்ததே. அவையின்றி ஏது பேசினாலென்ன? அதனை நான் பொருட்படுத்தவில்லை. அச் சொற்கள் காற்றுவாக்கில் செல்லட்டுமென்று விட்டுவிட்டேன். அப்பொழுது எஜமானனுடைய வசல்மொழிகள் எனது செவிகளுக்கு வீணைகானம் போலிருந்தன,



எஜமானன் என்னை வாய்நோகும்வரை வைது ஓய்ந்தபின், என்னைத் தோட்டத்திற்குச் சென்று வேலைபார்க்கும்படி கட்டளையிட்டனன். கண்டெடுத்த வெள்ளி நாணயத்தை நான் எனது சட்டைப்பையில் போட்டுக்கொண்டிட நாடோறும் தோட்டத்தில் வேலைசெய்துவந்தும், எஜமானன் என் விஷயத்தில் ஐயங்கொள்ளாமலிருந்தது எனக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று. எனது தோட்ட வேலையை நான் அவ்வப்போது சிறிதுநிறுத்திவிட்டுச் சட்டைப்பையைத் தடவிப் பார்த்து அதனுள் வெள்ளிநாணயம் நான் வைத்தபடி தவறிவிடாமல் பத்திரமாய் இருப்பது கண்டு சந்தோஷமடைவேன். "இங்ஙனம் நான் வசலுக்கும், பயத்திற்கும், சந்தேகத்திற்கும் இலக்காயிருந்தது வழியில் கிடைத்த வெள்ளி நாணயத்தாலல்லவா? இத்தகைய இன்னல்களுக்கு மூலமான இந்நாணயம் என்னைவிட்டொழிந்தால் எனது விசாரம் நீங்குமே! நிலையற்றதான இப்பொருளிருந்தும் விசாரம்! இல்லாதிருந்தாலும் விசாரம்! இதற்கு நான் யாது செய்வேன்? அந்தோ! இந்நாணயம் எனக்கு அகப்படாமலிருந்தால் மேலாயிருக்குமே!" என்று நான் பலதடவை எண்ணியெண்ணி மனம்வருந்தினேன். எனக்குப் பொருள்பொதிந்த பொட்டணம் எவ்விடத்தில் கிடைத்ததோ, அவ்விடத்திலேயே, அப்பொட்டணத்தை எறிந்துவிடலாமென எண்ணினேன். அப்பொழுது எனக்கு ஓர் யோசனையுண்டாயிற்று. அது—'அகஸ்மாத்தாகத் தெருவில் கிடைத்த பொருள் என்னால் அனுபவிக்கமுடியாமல் என்னைத் துன்புறுத்துவதுபோல் பிறரையும் துன்புறுத்தித் துயருறச்செய்யுமே' என்று இரக்கந் தோன்றியதேயாம். இவ்வகை மனோராஜ்யத்தில் பகற்பொழுதைக் கழித்து வீடு சேர்ந்தேன்.

நான் வீடு செல்லுமுன் எஜமானன் சோமசுந்தரம்பிள்ளை, என்னிடம், 'நீ இராமதாஸ் வீட்டுக்குச் சென்று நாளைக்காலையில் நெற்போரடிக்க நான் வீட்டுக்கு வரச்சொன்னதாகச் சொல்லிவிட்டுப்போ' என்று கூறினன். நான் அவ்வுத்தரவின்படியே இராமதாஸ் வீட்டுக்குப்போய் விஷயத்தைக் கூறினேன்.

நான் இராமதாஸ் வீட்டுக்குச் சென்று விஷயத்தைச் சொல்லித் திரும்புவதற்குள் வானம் மிகவும் இருண்டு ஒரே அந்தகாரமாய்விட்டது என் வீடிருக்கும் திசைகூடத் தெரியவில்லை உத்தேசத்துடன் வீடுநோக்கி மெதுவாய் நடந்துகொண்டிருக்கும்போது மனதில் புதியதோர் மனோவிசாரம் உதித்தது. அது திருடர் பயமென்ற விசாரம். எனக்கு வயது பன்னிரண்டாயும் திருடர் பயம் என்ற விசாரம் என் மனதில் இதுவரையும் தோன்றியதே இல்லை. ஏன்? கள்வர் அபகரிப்பதற்குரிய பொருளொன்றும் என்னிடத்தில் இல்லாமலிருந்ததே. இன்று அது என்மனதில் தோன்றி விசாரத்தை உண்டாக்கியிருக்கின்றது. எனது வீட்டுக்குவரும் வழி நல்ல பந்தோபஸ்துடை

குக்கூடக் கேட்காத அத்தனை மெதுவாயிருந்தது. அதனால் மு
கூறிய சொல்லையே மீண்டும் ஒருதரம் கூறி வினவினேன். நா
கொடுத்த பொட்டணத்தைப் பிரித்துப் பார்த்த இராமசாமி ரூபா
மடித்த கடிதமும் தன்னுடையதே என்றும் மடிப்புமட்டும் தா
மடித்தது போலன்றி மாறுபட்டிருக்கிறதென்றும் கூறினன்.

சோமசுந்தரம்பிள்ளை, என்னை நோக்கி 'இப் பொட்டணம் உ
னைக்கு எப்படிவந்தது?' என்று வினவினன் நான் மிகப் பயந்,
வழிந்தோடும் கண்ணீருடன், தழுதழுத்த மொழியில் நிகழ்ந்த செ
தியை விவரமாக விளக்கினேன்.

நான் செய்த இக்குற்றத்திற்காக என் எஜமானன் என்
வீட்டிலிருந்து துரத்திவிடுவான் அல்லது தண்டப்பிரயோகம் செ
வான் என்று என்னுள் எண்ணியிருந்தேன். எவ்விதமாயினுஞ் ச
உண்மையைக் கூறினேனல்லவா? என்று மகத்தான சந்தோ
மடைந்து எனது பயத்தைப் போக்கிக்கொண்டேன்.

எனது எஜமானன் நான் எண்ணியதற்கு மாருக என்
அருகிலழைத்து, மார்புறத்தழுவிக்கொண்டு, மிகுதியான அன்
காட்டி இனிய மொழிகளால் களிப்புடன், "உண்மையைக் கடை
பிடித்து ஒழுகுபவன் நீ ஒருவனே; உனக்குக் கடவுள் எல்லா நன்
களையும் தந்தருள்வன்" என்று நன்கு பாராட்டிப் புகழ்ந்து கூ
னன். அப்பொழுதே என்னுள்ளிருந்த மனோவிசாரம் மின்னெ
மறைந்து மாயமாயிற்று.

எனது எஜமானன் செய்தது போலவே, இராமசாமிய
என்னை மலர்ந்தமுகத்துடன் உவகை பொங்கக் கட்டியணைத்
கொண்டு, 'கோபாலா! இந்த ரூபாயில் உனக்குப் பாதி தருகிறே
பெற்றுக்கொள்ளவேண்டும்' என்றனன். அப்பொருளால் நா
அடைந்த மனோவிசாரம் போதுமானது. இன்னும் பாதி அதில் நா
பெறவேண்டுமோ? எனக்கு வேண்டாம், என்றேன்.

* * *

இவ்விதம் தனது இளமைக்காலத்து நீதி போதகமான கதை
யைப் பிள்ளைகளுக்கு வேலப்பன் கூறியதை மறவாது கவனத்தி
வைத்திருந்த கோபாலன், தன்னொத்த சிறுவர்கட்குக்கூற, அவர்க
கேட்டு மகிழ்ந்து அப்பாற் சென்றனர்.

"அர்த்தானாம் ஆர்ஜனே துக்கம்
ஆர்ஜிதானாஞ்ச ரக்ஷணே
ரக்ஷிதானாம் வ்யயே துக்கம்
கிமர்த்தம் [illegible]

188767

பங்குனிமீ 1உ வெளியாகும்

பிரமோத வருஷத்திய

"ஸ்ரீவித்யா"

# ஆபீஸ் காலண்டர்.

சித்திரைமீ 1உயிலிருந்து பங்குனிமீ முடிய
ஒவ்வொரு தேதிக்கும் கிழிக்கும் பக்கங்களாக
அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் தேதியுடன்
அதற்கு நேர்சரியான இங்கிலீஷ் தேதிகளும்
ஒவ்வொரு பக்கத்திலுமுள்ளது.

தென்னிந்தியாவில் தமிழ் உலகத்தோர் எல்லோருக்கும் தமிழ், இங்கிலீஷ் இரண்டு தேதிகளும் சேர்ந்து இருப்பதால் மிகவும் உபயோகமுள்ளது. மற்றபடி திதி வார நக்ஷத்திரங்களும், எல்லா விசேஷங்களும் அடங்கியுள்ளது.

எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.
வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

ஸ்வல்ப காப்பிகளே தயாராகும். தேவைக்கும், மாதிரி (இனும்) காப்பிக்கும், விலை விபரத்திற்கும் எழுதவும்.

பப்ளிஷர்ஸ் :—ஸ்ரீவித்யா பிரஸ்,
கும்பகோணம், (தென் இந்தியா)

N. B.—மாதிரி (இனும்) காப்பி வேண்டுவோர் தபால் செலவிற்காக 8 அணா (எட்டணா) ஸ்டாம்புடன் எழுதவும்.

Printed & Published by N. Venkataraman,
at Sri Vidya Press, Kumbakonam.

## "பால் வித்யா"

### சுக்ல வருஷத்திய் தை மாத பஞ்சாங்கம்.

| | இமீ | த.மீ | வார. | திதி, நக்ஷத்திரம், யோகம், விசேஷாதி முதலியன. |
|---|---|---|---|---|
| | 14 | 1 | செவ் | சசி 2-39, ○ 50-19, திரு 8-34, ○ உத்தராயணம்; [ஸங்கிராந்தி, கரிநாள் |
| | 15 | 2 | புத | பிர 43-12, புன 0-42, பூச 52-9, மாட்டுப்பொங் [கல், தைபூசம், கரிநாள் |
| | 16 | 3 | வியா | துவி 33-43, ஆயி 45-26, சாவித்ரி விருத, கரிநாள் |
| 1930 ஞூ ஜனவரிமீ | 17 | 4 | வெ | திரு 25-5, மக 38-59, ஜயலக்ஷ்மி விருதம், |
| | 18 | 5 | சனி | சது 17-59, பூர 33-56 |
| | 19 | 6 | ஞாயி | பஞ் 12-31, உத் 30-39 |
| | 20 | 7 | திங் | ஷஷ் 9 1, ஹஸ் 29-24 [கும்பாயனம் 43-30 |
| | 21 | 8 | செவ் | ஸப் 7-34, சித் 30-14 |
| | 22 | 9 | புத | அஷ் 8-10, சுவா 33-2 |
| | 23 | 10 | வியா | நவ 10-36, விசா 37-33 |
| | 24 | 11 | வெ | தச 14-39, அனு 43-21, கரி |
| | 25 | 12 | சனி | ஏகா 19-50, கேட் 50-5 |
| | 26 | 13 | ஞாயி | துவா 25-52, மூல 57-19 |
| மகரமீ | 27 | 14 | திங் | திர 32-10 பூரா 60-0, பிரதோஷம், மாஸசிவரா |
| | 28 | 15 | செ | சசி 38-35, பூரா 4-47, கிருஷ்ணாங்காரக சதுர்தசி |
| | 29 | 16 | புத | ● 44-53, உத்ரா 12-12, தை அமாவாஸை |
| | 30 | 17 | வியா | பிர 50-53, சிரவ 19-28, மாகசுத்தம், கரிநாள் |
| | 31 | 18 | வெ | துவி 56-30, அவி 26-21, சந்திரதரிசனம், கைலாச |
| | 1 | 19 | சனி | திரு 60-0, சத 32-51, [கௌரிவிருத |
| | 2 | 20 | ஞாயி | திரு 1-29, பூட் 38-36, சதுர்த்தி |
| | 3 | 21 | திங் | சது 5-44, உட் 43-29 மதன பஞ்சமி |
| பிப்ரவரிமீ | 4 | 22 | செவ் | பஞ் 8-55, ரே 47-12, சந்திரார்க்க விரு, ஷஷ்·உப |
| | 5 | 23 | புத | ஷஷ் 10-46, அசு 49-31, ரதஸப்தமி |
| | 6 | 24 | வியா | ஸப் 11-3, பர 50-9. |
| | 7 | 25 | வெ | அஷ் 9-32, ※ 4?-5, கிருத்திகா உபவாசம் |
| | 8 | 26 | சனி | நவ 6-15, ரோ 46-13 |
| | 9 | 27 | ஞாயி | தச 1-8, ஏகா 53-21, மிரு 41-45, ஸ்மார்த்த [ஏகாதசி |
| | 10 | 28 | திங் | துவா 46-34, திரு 35-56, பீஷ்ம-வராஹ-திலபத்- (துவாதசி, வைஷ்ணவ ஏகாதசி |
| | 11 | 29 | செவ் | திர 37-12, புன 29-4, பிரதோஷம். |

| | ரா | குரு | |
|---|---|---|---|
| சூர்ய புத | 15மகர·செ<br>18சாப·புத<br>23மகர·புத<br>5மகர சுக்<br>29கும்-சுக் | | — |
| செ சுக்·ச | | கே | |